www.prepp.in



# SPDG1-26

வினாத்தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை :
No. of pages in Question Booklet : 48

Question Booklet Series **M**

Question Booklet Serial No.

1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு)
Roll No. (As in Hall ticket) **SPDG**

மொழி
Language **TAMIL**

Language Code **T**

2. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்)
OMR Answer Sheet No. (to be filled in by the Candidate)

3. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)
Candidate's Name (As given in Application form)

4. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் கையொப்பமிட்டபடி)
Candidate's Signature (As given in the Application form)

5. கண்காணிப்பாளரின் கையொப்பம்
Invigilator's Signature

இந்த வினாத்தாளில் 150 கொள்குறிவகை வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் கொண்டது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்படமாட்டாது.

This booklet contains 150 multiple choice questions. Each question is of 1 mark. Candidates should answer all the questions. There is no negative marking for wrong answer.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கால அளவு | பொதுத் தேர்வர்கள் | 180 நிமிடங்கள் |
| | மாற்றுத்திறனாளி தேர்வர்கள் | 240 நிமிடங்கள் |
| Allotted time | General candidates | 180 minutes |
| | Differently abled candidates | 240 minutes |

(இறுதி இரண்டு பக்கங்களில் **(47, 48)** தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளை படிக்கவும்)

**(Read the instructions given in the last two pages (47, 48) of this booklet)**

SPACE FOR ROUGH WORK

Prepp Your Personal Exam Guide

1. Given below are two Statements :

**Statement (I)** :

All the aspects of growth and development are closely interlinked.

**Statement (II)** :

Emotional and Social adjustment is also linked with physical growth and development.

In the light of the above Statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) ✓ Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

2. Which one of the following is **not** a part of Neuron ?

(A) Dendrite

(B) Terminal button

(C) ✓ Receptor

(D) Axon

3. The hormone that helps us to tackle an emergency situation is :

(A) Thyroxine

(B) ✓ Adrenaline

(C) Growth hormone

(D) Insulin

1. கீழே இரண்டு **கூற்றுகள்** கொடுக்கப் பட்டுள்ளன.

**கூற்று (I)** :

மனித வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அனைத்து அம்சங்களும் நெருக்கமான தொடர்பு கொண்டவை.

**கூற்று (II)** :

மனவெழுச்சி மற்றும் சமூக இணக்கமும் உடல் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துடன் தொடர்புடையது.

மேற்கண்ட கூற்றுகளிலிருந்து **மிகவும் பொருத்தமான** விடையை கீழ்க்கண்ட-வற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

(A) ✓ **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரியானது.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரியானது அல்ல.

(C) **கூற்று (I)** சரியானது ஆனால் **கூற்று (II)** சரியானது அல்ல.

(D) **கூற்று (I)** சரியானது அல்ல ஆனால் **கூற்று (II)** சரியானது.

2. கீழே கொடுக்கப்பட்டவைகளில் நியூரானின் பகுதி **அல்லாதது** எது ?

(A) டென்டிரைட்

(B) முனைய குமிழ்கள்

(C) ✓ புகுவாய்

(D) ஆக்ஸான்

3. நமது அவசர காலங்களை சமாளிக்க உதவும் ஹார்மோனானது இது :

(A) தைராக்ஸின்

(B) ✓ அட்ரினலின்

(C) வளர்ச்சி ஹார்மோன்

(D) இன்சுலின்

**4.** According to Ericsson's Psycho-social theory a child enters primary school at this stage.

(A) Second stage

(B) Third stage

(C) ✓ Fourth stage

(D) Fifth stage

**5.** Which of the following is **not** a goal in learning ?

(A) Acquisition of knowledge

(B) Acquisition of skills

(C) Acquisition of attitudes

(D) ✓ Acquisition of physiological maturation

**6.** Expansion of 'LAD' is __________.

(A) Learner Acquisition Device.

(B) ✓ Language Acquisition Device.

(C) Learner Accessible Device.

(D) Language Accessible Device.

**7.** The relationship between emotion and cognition is :

(A) Unidirectional

(B) ✓ Bidirectional

(C) Multidirectional

(D) Monodirectional

**4.** எரிக்சனின் மன-சமூக கோட்பாட்டின்படி, ஒரு குழந்தை தொடக்கப் பள்ளியில் நுழையும் நிலை :

(A) இரண்டாம் நிலை

(B) மூன்றாம் நிலை

(C) ✓ நான்காம் நிலை

(D) ஐந்தாம் நிலை

**5.** பின்வருவனவற்றுள் கற்றலின் இலக்காக **அமையாதது** எது ?

(A) அறிவைப் பெறல்

(B) திறன்களைப் பெறல்

(C) மனப்பான்மையைப் பெறல்

(D) ✓ உடல்ரீதியான முதிர்வைப் பெறல்

**6.** 'LAD' என்பதன் விரிவாக்கம் __________.

(A) Learner Acquisition Device.

(B) ✓ Language Acquisition Device.

(C) Learner Accessible Device.

(D) Language Accessible Device.

**7.** உணர்ச்சிக்கும் அறிவாற்றலுக்கும் இடையிலான உறவானது :

(A) ஒரே திசையானது

(B) ✓ இருதர திசையானது

(C) பன்முக திசையானது

(D) ஒற்றை திசையானது

Prepp
Your Personal Exams Guide



**8.** Arrange Erikson's Psychosocial stages from birth to old age in the **correct** sequential order :

(a) Phallic

(b) Latency

(c) Adolescence

(d) Anal

Choose the **correct** answer from the options given below :

(A) (a), (b), (c), (d)

(B) (b), (c), (d), (a)

(C) (c), (d), (a), (b)

(D) ✓ (d), (a), (b), (c)

**9.** Given below are two **Statements** :

**Statement (I)** :

The MAX system is a widely used method for classifying infant's emotional expressions.

**Statement (II)** :

This is done by determining the correspondance between facial muscle movements and basic feeling states.

In the light of the above Statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) Both, **Statement (I)** and **(II)** are not correct.

(B) ✓ Both, **Statement (I)** and **(II)** are correct.

(C) **Statement (I)** is correct and **(II)** is not correct.

(D) **Statement (I)** is not correct and **(II)** is correct.

**8.** எரிக்சனின் உளசமூக கோட்பாட்டு படிநிலையின் அடிப்படையில் பிறப்பு முதல் முதிர்வு வரை வரிசைப்படுத்துக :

(a) பாலுணர்வு நிலை

(b) உள்ளுறைவு நிலை

(c) குமரப்பருவ நிலை

(d) குத நிலை

கீழே கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து **சரியானதை** தேர்வு செய்க.

(A) (a), (b), (c), (d)

(B) (b), (c), (d), (a)

(C) (c), (d), (a), (b)

(D) ✓ (d), (a), (b), (c)

**9.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளில் :

**கூற்று (I)** :

பச்சிளம் குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாடுகளை வகைப்படுத்த பரவலாக பயன்படுத்தப்படும் முறை "MAX" அமைப்பாகும்.

**கூற்று (II)** :

பச்சிளங் குழந்தைகளின் முக தசைகளின் இயக்கம் மற்றும் அடிப்படை உணர்வு நிலைகளை பொறுத்து தீர்மானிக்கப்-படுகிறது.

மேற்கண்ட கூற்றுகளிலிருந்து, கீழே கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து **சரியானதை** தேர்வு செய்க :

(A) **கூற்று (I)** மற்றும் **(II)** சரியானதல்ல.

(B) ✓ **கூற்று (I)** மற்றும் **(II)** சரியானது.

(C) **கூற்று (I)** சரி மற்றும் **கூற்று (II)** சரியானதல்ல.

(D) **கூற்று (I)** சரியானதல்ல மற்றும் **கூற்று (II)** சரியானது.

10. Match **List-I** with **List-II** :

| **List-I** | | **List-II** | |
|---|---|---|---|
| (a) | Chain learning | (i) | Higher mental or cognitive abilities are involved |
| (b) | Concept Learning | (ii) | To provide a common response to a class of stimuli |
| (c) | Verbal Association Learning | (iii) | Two or more S-R connections are joined together |
| (d) | Problem Solving Learning | (iv) | To emit chained responses of S-R type |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) ✓ (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

10. பட்டியல் -I-ஐ பட்டியல் -II உடன் பொருத்துக.

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | சங்கிலித் தொடர் கற்றல் | (i) | உயர் மன அல்லது அறி திறன்களை உள்ளடக்கியது |
| (b) | கருத்துகளைக் கற்றல் | (ii) | தூண்டலுக்கேற்ப சரியான துலங்களை வழங்குதல் |
| (c) | வாய்மொழிக் கற்றல் | (iii) | இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட S-R இணைப்புகளை ஒருங்கிணைத்தல் |
| (d) | பிரச்சனைத் தீர்க்க கற்றல் | (iv) | தூண்டல்-துலங் களுக்கான தொடர் துலங்கள்களை வெளிப்படுத்துதல் |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) ✓ (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

11. In Skinner's operant conditioning learning experiment ____________ is the reinforcement for the pigeon.

(A) ✓ Grain
(B) Light
(C) Lever
(D) Key

11. ஸ்கின்னரின் ஆக்க நிலையுறுத்தக் கற்றல் சோதனையில் புறாவுக்கு வலுவூட்டியாக இருப்பது ____________.

(A) ✓ தானியம்
(B) ஒளி
(C) நெம்புகோல்
(D) சாவி

**12.** Which is associated with success and rewards while children play ?

(A) Law of exercise

(B) Law of readiness

(C) Law of causation

(D) ✓ Law of effect

**13.** The young one of an elephant walks immediately after birth :

(A) Trial and error learning

(B) Insightful learning

(C) Immitative learning

(D) ✓ Instinctive learning

**14.** Separating the vessels that are kept one inside the other comes under this category :

(A) Multiple discriminative learning

(B) Chain learning

(C) ✓ Problem solving learning

(D) Motor learning

**15.** Pigeon box in the operant conditioning was used by __________.

(A) ✓ Skinner

(B) Watson

(C) Kohlar

(D) Thorndike

**12.** குழந்தைகள் விளையாடும் போது வெற்றி மற்றும் பரிசு பெறுவது எதனோடு தொடர்புடையது ?

(A) பயிற்சி விதி

(B) ஆயத்த விதி

(C) உருவாதல் விதி

(D) ✓ விளைவு விதி

**13.** யானைக்குட்டி (கன்று) பிறந்தவுடன் எழுந்து நடப்பது :

(A) முயன்று தவறிக் கற்றல்

(B) உட்காட்சி வழிக் கற்றல்

(C) போலச் செய்தல் வழிக் கற்றல்

(D) ✓ இயல்பூக்கக் கற்றல்

**14.** ஒன்றுக்குள் ஒன்று இறுகிய அடுக்குப் பாத்திரங்களைப் பிரித்தெடுப்பது இவ்வகை கற்றலாகும் :

(A) பலவகை வேறுபடுத்திக் கற்றல்

(B) சங்கிலிக் கற்றல்

(C) ✓ பிரச்சினை தீர்த்தல் கற்றல்

(D) உடல் இயக்கக் கற்றல்

**15.** ஆக்க நிலைநிறுத்த கற்றலுக்கு 'Pigeon Box' (புறாப் பெட்டி) சோதனைக் கருவியைப் பயன்படுத்தியவர் __________.

(A) ✓ ஸ்கின்னர் (Skinner)

(B) வாட்சன் (Watson)

(C) கோலர் (Kohlar)

(D) தார்ண்டைக் (Thorndike)

16. Match **List-I** with **List-II** :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Thorndike | (i) | Reinforcement of behaviour |
| (b) | Skinner | (ii) | Learning to respond behaviour |
| (c) | Pavlo | (iii) | Purposeful and goal oriented |
| (d) | Kohlar | (iv) | Rewards and praise |

(A) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(D)✓ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

17. The attachment behaviour of new born birds/puppy to the first large moving objects in their environment is called __________.

(A) Practicing
(B) Imitation
(C)✓ Imprinting
(D) Attention

18. Instead of playing with a toy physically, a child imagines its functions by just looking at its image. Which stage of concept formation is represented ?

(A) Enactive stage
(B) Symbolic stage
(C) Classifactory stage
(D)✓ Iconic stage

16. பட்டியல் -I-ஐ பட்டியல் -II உடன் பொருத்துக.

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | தார்ண்டைக் | (i) | நடத்தை வலுவூட்டல் |
| (b) | ஸ்கின்னர் | (ii) | பதில் நடத்தையைக் கற்றல் |
| (c) | பாவ்லோ | (iii) | பயனுள்ளது மற்றும் இலக்கு நோக்கியது |
| (d) | கோலர் | (iv) | பரிசு மற்றும் பாராட்டு |

(A) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(D)✓ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

17. புதிதாக பிறந்த பறவைகள்/நாய்க்குட்டிகள் அவற்றிற்கு முன் செல்லும் பொருள்களை பின் தொடர்ந்து வாழிடத்திற்கு செல்வது __________.

(A) பயிற்றுவித்தல்
(B) போலச் செய்தல்
(C)✓ உருப்படுத்தல்/அடியொற்றல்
(D) கவனம்

18. ஒரு குழந்தை விளையாடும் போது பொம்மையை தொடுவதை விட, அந்த பொம்மையின் சாயலை கண்டு அதன் செயல்களை கற்பனை செய்கிறது. இது எந்த பொதுமைக் கருத்துருவாக்க படிநிலையைக் குறிக்கிறது ?

(A) செயல்படு நிலை
(B) குறியீட்டு நிலை
(C) வகைப்படுத்தும் நிலை
(D)✓ உருவக நிலை

**19.** When Nithin saw the people crossing the road as the green light turned on and then followed them, which stage of thinking was used by Nithin ?

(A) Enactive
(B) Iconic
(✓) Symbolic
(D) Imitation

**20.** Why the term "School" is considered as a concept ?

(A) All schools have the same building design.
(B) All schools have the same number of teachers.
(✓) It is a place for constructing knowledge.
(D) All buildings have the same colour.

**21.** Match **List-I** with **List-II** :

| | List-I | | List-II |
|---|---|---|---|
| (a) | Sensorymotor stage | (i) | 2-7 years |
| (b) | Pre-operational stage | (ii) | Above 11 years |
| (c) | Concrete operation stage | (iii) | 7-11 years |
| (d) | Formal operation stage | (iv) | 0-2 years |

(A) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(✓) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)

**19.** மக்கள் பச்சை நிற விளக்கு ஒளிர்வதை கண்டவுடன் சாலையை கடப்பதை நிதின் பார்த்து, தானும் பின்பற்றுகிறான். இந்நிலையில் நிதின் எந்த நிலை சிந்தனையை பயன்படுத்தினார் ?

(A) செயல்பாட்டு நிலை
(B) உருவக நிலை
(✓) குறியீட்டு நிலை
(D) பின்பற்றும் நிலை

**20.** 'பள்ளிக்கூடம்' என்ற சொல்லை ஒரு கருத்தாக கருதுவது ஏன் ?

(A) எல்லா பள்ளிகளும் ஒரே கட்டட வடிவில் இருப்பதால்
(B) எல்லா பள்ளிகளிலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை ஒன்றாக இருப்பதால்
(✓) அறிவை கட்டமைப்பதற்கான ஓர் இடம்.
(D) எல்லா கட்டடங்களும் ஒரே நிறத்தில் இருப்பதால்

**21.** **பட்டியல்-I**-யை **பட்டியல்-II** உடன் பொருத்துக.

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| (a) | புலன் இயக்க நிலை | (i) | 2 முதல் 7 வயது வரை |
| (b) | செயலுக்கு முற்பட்ட நிலை | (ii) | 11 வயதுக்கு மேல் |
| (c) | புலனீடான செயல்நிலை | (iii) | 7 முதல் 11 வயது வரை |
| (d) | கருத்தியல் நிலை | (iv) | 0 முதல் 2 வயது வரை |

(A) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(✓) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)

Prepp Your Personal Exam Guide

22. Choose the **most appropriate** answer regarding the **Assertion (A)** and **Reason (R)**:

**Assertion (A)** :

Much of the hightened emotional characteristic of early childhood is psychological rather than physiological.

**Reason (R)** :

The children become angry when they find they are incapable of doing what they think they can do easily and successfully.

(A)✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.

(B) Both **(A)** and **(R)** are correct but **(R)** is not the correct explanation of **(A)**.

(C) **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is not correct but **(R)** is correct.

23. "Late childhood is a period of relative emotional calm". From the given options choose the **most appropriate** reason :

(A) They take balanced diet

(B)✓ They involve in games and sports

(C) They concentrate on studies

(D) They are satisfied with what they have

22. **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** குறித்த **மிக பொருத்தமான** விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**கூற்று (A)** :

முன் குழந்தைப் பருவத்தில் காணப்படும் பெரும்பாலான உயரிய மனவெழுச்சி உடலியலன்றி உளவியல் சார்ந்தது.

**காரணம் (R)** :

குழந்தைகள் தங்களால் எளிதாகவும் வெற்றிகரமாகவும் முடிக்க இயலும் எனக் கருதப்பட்டவற்றை செய்ய முடியாத போது கோபம் கொள்கின்றனர்.

(A)✓ **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை. **(R)** ஆனது **(A)** -ன் சரியான விளக்கம்.

(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரியானவை, ஆனால் **(R)** ஆனது **(A)** -ன் சரியான விளக்கம் அல்ல.

(C) **(A)** சரியானது ஆனால் **(R)** தவறானது.

(D) **(A)** தவறானது ஆனால் **(R)** சரியானது.

23. ''பின் குழந்தைப்பருவம் என்பது ஏறக்குறைய மனவெழுச்சி அமைதி கொண்ட பருவம்.'' கொடுக்கப்பட்ட தெரிவுகளில் **மிகப்பொருத்தமானக்** காரணத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) அவர்கள் சரிவிகித உணவை உட்கொள்கின்றனர்.

(B)✓ அவர்கள் தனி மற்றும் குழு விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.

(C) அவர்கள் படிப்பில் கவனம் செலுத்துகின்றனர்.

(D) அவர்கள் தாங்கள் வைத்திருப்பதுடன் திருப்தியடைகின்றனர்.

**24.** Given below are two Statements related with constructivist teacher.

**Statement (I) :**

Teachers must guide students to choose meaningful projects or issues to investigate.

**Statement (II)** :

Teachers must use lecture method to help students learn their own.

In the light of the above Statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

**24.** ஆக்கவியல் ஆசிரியர் சார்ந்து இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**கூற்று (I)** :

ஆய்வுக்குரிய செயல்திட்டங்கள் அல்லது பிரச்சனைகளை மாணவர்கள் தேர்ந்தெடுக்க ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

**கூற்று (II)** :

மாணவர்கள் தானே கற்பதற்கு உதவ ஆசிரியர்கள் விரிவுரை முறையை பயன்படுத்த வேண்டும்.

மேற்காணும் கூற்றுகளின் அடிப்படையில், கீழ்க்கண்ட தெரிவுகளில் **சரியான** விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(C) ✓ **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**25.** Which type of learning helps the children to develop social, cultural and language in his day to day life ?

(A) Associate learning

(B) Oral learning

(C) Continuous learning

(D) ✓ Imitation

**25.** குழந்தை தன் அன்றாட வாழ்வில் சமூக வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சியைப் பெற எவ்வகைக் கற்றல் உதவுகிறது ?

(A) இணைத்துக் கற்றல்

(B) வாய்மொழிக் கற்றல்

(C) தொடர் கற்றல்

(D) ✓ பின்பற்றிக் கற்றல்

**26.** Match **List-I** with **List-II** :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Type approach | (i) | Eysenck |
| (b) | Trait approach | (ii) | Carl Roger |
| (c) | Type-cum-Trait approach | (iii) | Allport |
| (d) | Humanistic approach | (iv) | Sheldon |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**26.** பட்டியல் -I-ஐ பட்டியல் -II உடன் பொருத்துக.

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | வகையியல் அணுகுமுறை (Type approach) | (i) | ஐசென்க் |
| (b) | உளப்பண்பு அணுகுமுறை (Trait approach) | (ii) | கார்ல் ரோஜர் |
| (c) | வகையியல் மற்றும் உளப்பண்புகள் இணைந்த அணுகுமுறை (Type-cum-Trait approach) | (iii) | ஆல்போர்ட் |
| (d) | மனிதவியல் அணுகுமுறை (Humanistic approach) | (iv) | ஷெல்டன் |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**27.** Which of the following is **not** a characteristic of Superego ?

(A) Ethical moral arm of personality.

(B) Perfection is its goal rather than pleasure.

(C) ✓ Considers only satisfaction of its needs and desires.

(D) Decision making body which decides what is good or bad.

**27.** கீழ்க்காண்பனவற்றுள் 'சூப்பர்ஈகோ'-வின் பண்பு **அல்லாதது** எது ?

(A) ஆளுமையின் அறக்கோட்பாடுகளை உள்ளடக்கியது.

(B) மகிழ்ச்சியை விட முழுமையான நிறைவினைப் பெறுதலே நோக்க-மாகக் கொண்டது.

(C) ✓ தேவை மற்றும் விருப்பங்களின் நிறைவை மட்டும் கருத்தில் கொண்டது.

(D) எது சரி, எது தவறு என்பது பற்றி முடிவெடுக்கக் கூடியது.

**28.** Given below are two Statements, one is labelled as **Assertion (A)** and the other is labelled as **Reason (R)**.

**Assertion (A) :**

Exercise and games are important for students.

**Reason (R) :**

The students those who are playful will be active and successful in Education.

In the light of the above Statements, choose the **most appropriate** answer from options given below :

(A) Both **(A)** and **(R)** are true, but **(R)** is not the correct explanation of **(A)**.

(B) ✓ Both **(A)** and **(R)** are true. **(R)** is the correct explanation of **(A)**.

(C) **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is incorrect but **(R)** is correct.

**28.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களில் ஒன்று **கூற்று (A)** மற்றொன்று **காரணம் (R).**

**கூற்று (A) :**

உடற்கல்வியும், விளையாட்டும் மாணவர்-களுக்கு அளிக்கப்படுவது அவசியம்.

**காரணம் (R) :**

நன்றாக ஓடியாடி விளையாடும் மாணவர்கள் சுறுசுறுப்பாகவும் கல்வியில் சிறந்தும் காணப்படுவர்.

மேற்காணும் கூற்றுகளிலிருந்து, கீழேயுள்ள தெரிவுகளில் **மிகப் பொருத்தமான** விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி. ஆனால் **(R)** என்பது **(A)** -வின் சரியான விளக்கம் அல்ல.

(B) ✓ **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி. ஆனால் **(R)** என்பது **(A)** -வின் சரியான விளக்கம்.

(C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.

(D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

**29.** Given below are two Statements, one is labelled as **Assertion (A)** and the other is labelled as **Reason (R)**.

**Assertion (A) :**

Newspaper, Radio, Computer and Television play a vital role in children's moral development.

**Reason (R) :**

Children's learning takes place in outside the classroom also.

In the light of the above Statements, choose the **most appropriate** answer from the option given below.

(A)✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.

(B) **(A)** is not correct but **(R)** is correct.

(C) Both **(A)** and **(R)** are correct but **(R)** is not the correct explanation of **(A)**.

(D) Both **(A)** and **(R)** are not correct.

**29.** கீழ்காணும் இரண்டு வாக்கியங்களில் ஒன்று **கூற்று (A)** மற்றொன்று **காரணம் (R)** எனக் கொள்க.

**கூற்று (A) :**

செய்தித்தாள்கள், வானொலி, கணினி மற்றும் தொலைக்காட்சி ஆகியவை குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**காரணம் (R) :**

குழந்தைகளின் கற்றலானது பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது.

மேற்காண் கூற்றுகளின்படி, **பொருத்த-மானதை** தேர்வு செய்க.

(A)✓ **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மற்றும் **(R)** ஆனது, **(A)**-க்கு சரியான விளக்கம் ஆகும்.

(B) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.

(C) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மற்றும் **(R)** ஆனது **(A)**-க்கு சரியான விளக்கம் அல்ல.

(D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் தவறு.

**30.** Which of the important moral character learned by Mahatma Gandhi through "Harichandra Drama" ?

(A) Punctuality

(B) Non-Vegetarian

(C) Honesty

(D)✓ Speaking the truth

**30.** 'அரிச்சந்திர நாடகம்' மூலம் மகாத்மா காந்தியடிகள் கற்றுக்கொண்ட முக்கிய ஒழுக்கப்பண்பு யாது ?

(A) காலந்தவறாமை

(B) புலால் உண்ணாமை

(C) நேர்மை

(D)✓ உண்மை பேசுதல்

**31.** சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் - என்று பாடியவர் :

(A) பாரதியார்
(B) ✓ க. சச்சிதானந்தன்
(C) பாரதிதாசன்
(D) தேவநேயப் பாவாணர்

**32.** **கூற்று (1)** :
கங்கை கொண்ட சோழபுரம் கோவில் விமானம் 34 அடி குறுக்களவு கொண்டது.
**கூற்று (2)** :
இவ்விமானம் செங்கற்களால் கட்டப்பட்டது.

(A) **கூற்று (1)** சரி **கூற்று (2)** சரி
(B) ✓ **கூற்று (1)** தவறு **கூற்று (2)** தவறு
(C) **கூற்று (1)** சரி **கூற்று (2)** தவறு
(D) **கூற்று (1)** தவறு **கூற்று (2)** சரி

**33.** **கூற்று** :
பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு, வடிவம் முதலியவற்றில் சில எழுத்துகள் ஒத்துப்போகின்றன. அவற்றை இன எழுத்துகள் என்று கூறுவர்.
**காரணம்** :
எல்லா இன எழுத்துகளும் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்.

(A) **கூற்று** தவறு **காரணம்** சரி
(B) ✓ **கூற்று** சரி **காரணம்** தவறு
(C) **கூற்று** சரி **காரணம்** சரி
(D) **கூற்று** தவறு **காரணம்** தவறு

**34.** 'நிருமித்த' என்ற சொல்லின் பொருள் ___________.

(A) நிரூபித்த
(B) சிறப்பித்த
(C) ✓ உருவாக்கிய
(D) பாராட்டிய

**35.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆழிக் கிணறு | (i) | கமலை நீர்ப்பாய்ச்சும் கிணறு |
| (b) | உறைக் கிணறு | (ii) | கடலருகே தோண்டிய கிணறு |
| (c) | கட்டுக் கிணறு | (iii) | மணற்பாங்கான இடத்தில் தோண்டிய கிணறு |
| (d) | பூட்டைக் கிணறு | (iv) | சரளை நிலத்தில் தோண்டிய கிணறு |

(A) ✓ (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(iii), (b)-(i), (c)-(ii), (d)-(iv)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

**36.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இயற்கை ஓவியம் | (i) | கம்பராமாயணம் |
| (b) | இயற்கை இன்பக்கலம் | (ii) | பத்துப்பாட்டு |
| (c) | இயற்கைப் பரிணாமம் | (iii) | பெரியபுராணம் |
| (d) | இயற்கை அன்பு | (iv) | கலித்தொகை |

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(B) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)
(C) ✓ (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

**37.** சீர்களை வரிசைப்படுத்திக் குறளை எழுதுக.

(A) நிறையுடைமை வேண்டின் பொறையுடைமை நீங்காமை போற்றி ஒழுகப் படும்.

(B) நிறையுடைமை நீங்காமை பொறையுடைமை வேண்டின் போற்றி ஒழுகப் படும்.

(C) ✓ நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும்.

(D) பொறையுடைமை நீங்காமை வேண்டின் நிறையுடைமை போற்றி ஒழுகப் படும்

**38.** **கூற்று (1)** :

கேட்டல், பேசுதல் என்னும் முதல் நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.

**கூற்று (2)** :

படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் பிறமொழிகள் அறிமுகம் ஆவதில்லை.

(A) **கூற்று (1)** சரி; **கூற்று (2)** சரி

(B) ✓ **கூற்று (1)** சரி; **கூற்று (2)** தவறு

(C) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** தவறு

(D) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** சரி

**39.** **சரியான** தொடரைக் கண்டறிக.

(A) தவலை தண்ணீரில் குதித்தது.

(B) மீன் பிடிக்க வளை வீசினான்.

(C) ✓ அக்கறையுடன் படித்தால் முன்னுக்கு வரலாம்.

(D) குக்கரிலிருந்து ஒளி வந்தது.

**40.** ஓரெழுத்து ஒருமொழிகளில் எத்தனை சொற்கள் குறில் எழுத்துகளாக அமைந்துள்ளன ?

(A) மூன்று

(B) ✓ இரண்டு

(C) நாற்பது

(D) பன்னிரண்டு

**41.** ''புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்'' - இப்பாடல் வரி இடம்பெற்ற நூல் :

(A) மணிமேகலை

(B) சிலப்பதிகாரம்

(C) ✓ நெடுநல்வாடை

(D) வளையாபதி

**42.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ராஜா நேற்று வந்தான் | (i) | செயப்பாட்டு வினைத் தொடர் |
| (b) | ராஜா நேற்று வருவித்தான் | (ii) | செய்வினைத் தொடர் |
| (c) | கவிதா உரை படித்தாள் | (iii) | பிறவினைத் தொடர் |
| (d) | உரை கவிதாவால் படிக்கப்பட்டது | (iv) | தன்வினைத் தொடர் |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

(D) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

**43.** ''வாடா ராசா, வாடா கண்ணா'' என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது :

(A) திணை வழுவமைதி

(B) ✓ பால் வழுவமைதி

(C) இட வழுவமைதி

(D) கால வழுவமைதி

**44.** **கூற்று (1)** :

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒரு தொடரில் இடம் பெற்றிருக்கும்.

**கூற்று (2)** :

எழுவாயோ, செயப்படு பொருளோ இல்லாமலும் தொடர் அமையும்.

(A) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு

(B) ✓ **கூற்று (1)** சரி, **கூற்று (2)** சரி

(C) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** தவறு

(D) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

**45.** வினை மரபுச் சொற்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அம்பு | (i) | விழுங்கினான் |
| (b) | சுவர் | (ii) | முடைந்தார் |
| (c) | கூடை | (iii) | எழுப்பினார் |
| (d) | மாத்திரை | (iv) | எய்தார் |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(C) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

**46.** **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன

விச்சைமற்று அல்ல பிற' - கல்வியின் பெருமையை உணர்த்தும் நாலடியாரின் பாடல் வரிகளை எழுதியவர் யார் ?

(A) கபிலர்

(B) திருவள்ளுவர்

(C) ஔவையார்

(D) ✓ சமணமுனிவர்பலர்

**47.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அச்சு வெல்லம் | (i) | புளிப்பு |
| (b) | வாழைப்பூ | (ii) | கார்ப்பு |
| (c) | மிளகாய் | (iii) | இனிப்பு |
| (d) | புளியங்காய் | (iv) | துவர்ப்பு |

(A) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)

(B) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

(D) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)

**48.** கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் **கூற்றும் காரணமும் சரியா** எனக் கண்டறிக :

**கூற்று** :

''நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்'' என்பார் ஆபிரகாம் லிங்கன்.

**காரணம்** :

மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும் தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று நூல்களும்தான், பட்டறிவையும் நூலகம் தருகிறது.

(A) **கூற்று** சரி; **காரணம்** தவறு

(B) **கூற்று** தவறு; **காரணம்** சரி

(C) ✓ **கூற்று** சரி; **காரணம்** சரி

(D) **கூற்று** தவறு; **காரணம்** தவறு

**49.** **சரியான** விடையைத் தேர்க.

விசேஷம் என்பதன் பொருள் யாது ?

(A) நுட்பம்

(B) நாணம்

(C) இசைவகை

(D) ✓ சிறப்பு

50. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் **கூற்றும், காரணமும் சரியா** எனக் கண்டறிக :
**கூற்று :**
திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று, அஃது ஒரு வாழ்வியல் நூலாகும்.
**காரணம் :**
எக்காலத்துக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துக்கள் இதில் இல்லை.
(A) ✓ **கூற்று** சரி; **காரணம்** தவறு
(B) **கூற்று** சரி; **காரணம்** சரி
(C) **கூற்று** தவறு; **காரணம்** தவறு
(D) **கூற்று** தவறு; **காரணம்** சரி

51. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எழுவாயுடன் பெயர், வினை வினா தொடர்வது | (i) | உரிச்சொல் தொடர் |
| (b) | வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக அமையும் தொடர்கள் | (ii) | பெயரெச்சத் தொடர் |
| (c) | உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது | (iii) | வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் |
| (d) | முற்றுப்பெறாத வினை பெயரைக் கொண்டு முடிவது | (iv) | எழுவாய்த் தொடர் |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(B) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(C) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
(D) (a)-(i), (b)-(iv), (c)-(ii), (d)-(iii)

52. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | யானை | (i) | குருளை |
| (b) | சிங்கம் | (ii) | கன்று |
| (c) | புலி | (iii) | குட்டி |
| (d) | குரங்கு | (iv) | பறழ் |

(A) ✓ (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
(B) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

53. ''சேகரமாய் வைத்த மரங்கள் - அத்தனையும்
சின்னபின்ன மாய் ஒடிந்து பின்னமாச்சுதே''
- இப்பாடல் வரிகளில் சேகரமாய் என்பதன் பொருள் என்ன ?
(A) மிக வருந்தி
(B) முறையாக
(C) ✓ கூட்டம்
(D) சரியாக

54. MONOLINGUAL என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எது ?
(A) ஒப்பெழுத்து
(B) ✓ ஒரு மொழி
(C) பெருங்காற்று
(D) புயல்

55. காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று :
(A) ஏவல் வினைமுற்று
(B) வியங்கோள் வினைமுற்று
(C) ✓ குறிப்பு வினைமுற்று
(D) தெரிநிலை வினைமுற்று

56. கூற்று (1) :

சொற்கள் அடுக்கி வந்து, பிரிந்தாலும் பொருள் தருவது அடுக்குத் தொடர் ஆகும்.

கூற்று (2) :

அடுக்குத் தொடர் ஓரெழுத்து ஒரு மொழியாய் மட்டுமே வரும்.

(A) கூற்றுகள் (1) வும், (2) வும் சரி

(B) கூற்றுகள் (1) வும், (2) வும் தவறு

(C) ✓ கூற்று (1) சரி கூற்று (2) தவறு

(D) கூற்று (1) தவறு கூற்று (2) சரி

57. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பெயர்ச்சொல் | (i) | உம் |
| (b) | உரிச்சொல் | (ii) | மாநகர் |
| (c) | இணைப்புச் சொல் | (iii) | ஓடுதல் |
| (d) | வினைச்சொல் | (iv) | மரம் |

(A) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

(B) (a)-(i), (b)-(iii), (c)-(iv), (d)-(ii)

(C) ✓ (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

58. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அலந்தவர் | (i) | பகைவர் |
| (b) | செறாஅமை | (ii) | பொறுத்தல் |
| (c) | நோன்றல் | (iii) | வெறுக்காமை |
| (d) | போற்றார் | (iv) | வறியவர் |

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(B) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

(C) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

59. கூற்று (1) :

சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள்.

கூற்று (2) :

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான 'வல்வில் ஓரி' சிலம்பாட்டத்தில் சிறந்து விளங்கியவர்.

(A) கூற்று (1), கூற்று (2) இரண்டும் சரி

(B) கூற்று (1), கூற்று (2) இரண்டும் தவறு

(C) கூற்று (1) தவறு, கூற்று (2) சரி

(D) ✓ கூற்று (1) சரி, கூற்று (2) தவறு

60. கூற்று (1) :

கல்லணை தமிழர்களின் கட்டுமானத் திறனைப் பறைசாற்றுவதாக உள்ளது.

கூற்று (2) :

கல்லணை கி.பி. 6 -ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

(A) கூற்று (1), கூற்று (2) இரண்டும் சரி

(B) ✓ கூற்று (1), சரி, கூற்று (2) தவறு

(C) கூற்று (1), தவறு கூற்று (2) சரி

(D) கூற்று (1), கூற்று (2) இரண்டும் தவறு

61. Choose the answer from the options given below to fill the blank in the sentence below.
_________ is a literary device that repeats the same words or phrases a few times to make an idea clearer, or used to emphasize a feeling or idea, create a rhythm and bring attention to an idea.
(A) Alliteration
(B) ✓ Repetition
(C) Personification
(D) Rhyming words

62. Given below are two statements one is labelled as **Assertion (A)** and other is labelled as **Reason (R)**.
**Assertion (A) :**
Scientists have proved that travelling improves memory and reduces the risk of heart disease.
**Reason (R) :**
Travel stimulates one's imagination and curiosity to seek information which engages both the heart and the mind.
Choose the **most appropriate** answer :
(A) **(A)** is correct but **(R)** is not correct.
(B) **(A)** is not correct but **(R)** is correct.
(C) ✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.
(D) Both **(A)** and **(R)** are correct but **(R)** is not the correct explanation of **(A)**.

63. Who introduced the "Bread Sandwich" method in farming ? Choose the answer from the options given :
(A) Severn Suzuki
(B) ✓ Nammazhwar
(C) M.S. Mahadevan
(D) Morgan Geiser

64. Choose the answer from the given options to fill the blank in the sentence below.
Neeraja Blaot was the youngest civilian to receive India's highest honour for bravery in peacetime. The _________ award.
(A) Veer Chakra
(B) Bharath Ratna
(C) ✓ Ashok Chakra
(D) Arjuna

65. Match **List-I** with **List-II** :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Tour | (i) | A short educational or recreational trip |
| (b) | Pilgrimage | (ii) | A casual outing where food is usually packed and taken |
| (c) | Excursion | (iii) | Mostly a journey to a holy site |
| (d) | Picnic | (iv) | Travelling to multiple locations |

Choose the **correct** answer from the options given below :
(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(B) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)
(C) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
(D) (a)-(i), (b)-(iv), (c)-(iii), (d)-(ii)

66. Choose the rhyme scheme used in the stanza below from the given options :
"At last I have this to say
I don't lie to this day
The trick is the rhyme
Let's try this one day at a time"
(A) a b a b
(B) ✓ a a b b
(C) a b b a
(D) a b a a

67. Fill in the blank in the sentence below with the simple past tense form of the word given in brackets.
The old man was climbing the stairs in a hurry, when he slipped, because he __________ (lose) his balance.
(A) loosed
(B) had lost
(C) ✓ lost
(D) has lost

68. Match the *Root words* in **List-I** with their suffixes in **List-II**.

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Arrange | (i) | ful |
| (b) | Colour | (ii) | mate |
| (c) | Connect | (iii) | ment |
| (d) | Class | (iv) | ion |

Choose the answer from the given options :
(A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(B) ✓ (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
(C) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
(D) (a)-(i), (b)-(iv), (c)-(ii), (d)-(iii)

69. Given below are two statements.
**Statement (I) :**
Homonyms are words with similar sound and spelling, but with a different meaning.
**Statement (II) :**
Homophones are words with similar sound and meaning but with a different spelling.
In light of the above statements, choose the answer from the options given below :
(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.
(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.
(C) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.
(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

70. Select the word from the list below which is NOT related with the making of clothes.
(A) Yarn
(B) Handloom
(C) Skeins
(D) ✓ Utensil

71. Match the phrases in **List-I** with their meanings in **List-II**.

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Expression of greeting | (i) | Grateful for the help |
| (b) | Expression of thanking | (ii) | Sorry for the mistake |
| (c) | Expression of apologizing | (iii) | Could you plaease guide me ? |
| (d) | Making Requests | (iv) | Hello Uncle. Good morning. |

(A) ✓ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(B) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(C) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

72. Given below are two statements :
**Statement (I) :**
A paragraph discusses one idea in detail and aids the development of an overall topic.
**Statement (II) :**
A paragraph discusses many ideas and does not aid in the development of the topic.
In light of the above given statements, choose the answer from the options given below.
(A) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is not correct.
(B) **Statement (I)** is not correct but **Statement (II)** is correct.
(C) **Statements (I)** and **(II)** are correct.
(D) **Statements (I)** and **(II)** are not correct.

73. Given below are two statements : One is an **Assertion (A)** and the other its **Reason (R)**.

**Assertion (A) :**

The branches in the trees all had new leaves.

**Reason (R) :**

Its the spring season.

In the light of the above statements, choose the answer from the options given below.

(A) ✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation for **(A)**.

(B) Both **(A)** and **(R)** are correct, but **(R)** is not the correct explanation of **(A)**.

(C) **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is not correct but **(R)** is correct.

74. * Change the meaning of the sentence below by changing the verb 'stich' in the sentence into the present continuous form. Choose the answer from the given options.

My Sister stiches her clothes since her school days.

(A) My sister is stiching her clothes since her school dyas.

(B) My sister stiched her clothes since her school days.

(C) My sister will have stiched her clothes since her school days.

(D) My sister is being stiched her clothes since her school days.

75. * Match the words in **List - I** with their most suitable endings in **List - II** :

| **List - I** | | **List - II** | |
|---|---|---|---|
| (a) | snow | (i) | set |
| (b) | sun | (ii) | hall |
| (c) | drawing | (iii) | room |
| (d) | waiting | (iv) | fall |

Choose the **correct** answer from the options given below :

(A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

(B) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

(C) (a)-(i), (b)-(iii), (c)-(ii), (d)-(iv)

(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

76. Match the adult animals in **List - I** with their young ones in **List - II**.

| **List - I** | | **List - II** | |
|---|---|---|---|
| (a) | Horse | (i) | Eaglet |
| (b) | Eagle | (ii) | Hatchling |
| (c) | Ostrich | (iii) | Fawn |
| (d) | Deer | (iv) | Foal |

Choose the answer from the options below :

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

(B) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

(C) ✓ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

(D) (a)-(i), (b)-(iv), (c)-(iii), (d)-(ii)

77. Given below are two statements :

**Statement (I) :**

Idioms are a group of words with a specific meaning.

**Statement (II) :**

Idioms do not have a figurative meaning.

(A) Both **Statement (I)** and **(II)** are correct.

(B) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(C) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

(D) Both **Statement (I)** and **(II)** are incorrect.

78. Choose the tetrasyllabic word from the list below :

(A) evaluation

(B) consider

(C) ✓ university

(D) personality

79. Match the words given in **List–I** with the correct prefix in **List–II**.

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | wanted | (i) | re |
| (b) | agree | (ii) | under |
| (c) | paint | (iii) | dis |
| (d) | worked | (iv) | un |

Choose the **correct** answer from the options given below :

(A) (a)–(ii), (b)–(iii), (c)–(i), (d)–(iv)

(B) (a)–(iv), (b)–(ii), (c)–(i), (d)–(iii)

(C) ✓ (a)–(iv), (b)–(iii), (c)–(i), (d)–(ii)

(D) (a)–(iii), (b)–(ii), (c)–(iv), (d)–(i)

80. Given below are two statements :

One is an **Assertion (A)** and other is its **Reason (R)**.

**Assertion (A) :**

Relationships are one's true wealth.

**Reason (R) :**

Relatives do not show any care and affection.

(A) Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.

(B) Both **(A)** and **(R)** are correct but **(R)** is not the correct explanation of **(A)**.

(C) ✓ **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is not correct but **(R)** is correct.

81. Given below are the two statements :

**Statement (I) :**

The young seagull screamed with joy. Here the word joy is a noun.

**Statement (II) :**

The young seagull screamed joyfully. Here the word joyfully is an adverb.

In the light of the above statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) ✓ Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

82. Given below are two statements :

**Statement (I) :**

When a sentence expresses surprise, wonder, or emotion, we use a question Mark.

**Statement (II) :**

When a sentence makes a request or a command, we end it with a full stop.

In the light of the above statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) ✓ **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

83. Choose the original word for the clipped word underlined in the following sentence.

'The Phone is on the table'

(A) Microphone

(B) ✓ Telephone

(C) Xylophone

(D) Saxophone

84. Choose the sentence from the list of sentences below which explains, the meaning of the word '**prison**'.

(A) ✓ A place where people who do not follow the law are locked up

(B) The chair of the ruler

(C) A low hill at the base of a mountain

(D) Caring place for protecting some good people

85. Given below are two statements :

**Statement (I) :**

An anaphora is a technique where several phrases begin with the same word or words.

**Statement (II) :**

An Epithet is an adjective or phrase expressing a quality or attribute regarded as characteristic of the person or the thing mentioned.

(A) ✓ **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

86. Choose the correct option.

In our National Emblem the words "Sathyameva Jayate" are written in __________ script.

Choose the answer from the options below to fill the blank in the given sentence.

(A) Pali

(B) ✓ Devanagari

(C) Hindi

(D) Sanskrit

87. Match the phrasal verbs in **List-I** with their meanings in **List-II**. Choose the answer from the given options.

| **List - I Phrasal verbs** | | **List - II Meanings** | |
|---|---|---|---|
| (a) | put out | (i) | investigate something |
| (b) | look into | (ii) | abandon something |
| (c) | give up | (iii) | take care of something / someone |
| (d) | look after | (iv) | stop something from continuing |

(A) ✓ (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

(B) (a)-(i), (b)-(iii), (c)-(ii), (d)-(iv)

(C) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

(D) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

88. Choose the **correct** expansion of IIT from the options given below.

(A) Indian Industry of Technology

(B) ✓ Indian Institute of Technology

(C) Indian Institute of Textile

(D) Indian Institute of Techno Products

89. Identify the connectors used when comparing things from the list below :

(A) and, as well as, more over

(B) first, second, third

(C) whereas, instead of, otherwise

(D) ✓ similarly, likewise, in the same way

90. **Statement (I) :**

A Pun is a play on words. It is commonly used in riddles, jokes and poems.

**Statement (II) :**

A limerick is a short poem with a specific rhyme scheme. It often has a serious ending.

In the light of the above statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

(D) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

**91.** A quadrilateral in which a pair of opposite sides are parallel is :

(A) Parallelogram ✓(B) Trapezium
(C) Rhombus (D) Rectangle

**92.** Total number of diagonals in a cube are :

(A) 12 (B) 8
(C) 4 ✓(D) 16

**93.** **Statement (I) :**

Number of unit squares in a rectangle of length 6 cm and breadth 2 cm is 12.

**Statement (II) :**

Number of unit squares in a square of 4 cm side is 8.

In light of above statements, choose the **most appropriate** answer from the options given below :

(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.
(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.
✓(C) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.
(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

**94.** Identify the **incorrect** statement :

(A) 0 is an even number
(B) 6 is a perfect number
(C) The total number of primes from 1 to 100 is 25
✓(D) 1 is either prime or composite

**91.** ஒரு ஜோடி எதிர்ப்பக்கங்களை இணையாகக் கொண்ட நாற்கரம் :

(A) இணைகரம் ✓(B) சரிவகம்
(C) சாய்சதுரம் (D) செவ்வகம்

**92.** ஒரு கன சதுரத்தின் மொத்த மூலை விட்டங்களின் எண்ணிக்கை :

(A) 12 (B) 8
(C) 4 ✓(D) 16

**93.** **கூற்று (I) :**

6 செ.மீ நீளமும் 2 செ.மீ அகலமும் கொண்ட செவ்வகத்தில், ஓரலகுச் சதுரங்களின் எண்ணிக்கை 12.

**கூற்று (II) :**

4 செ.மீ பக்க அளவு உடைய சதுரத்தில் ஓரலகுச் சதுரங்களின் எண்ணிக்கை 8.

மேற்கண்ட கூற்றுகளுக்கான **பொருத்தமான** விடையை கீழ்க்கண்டவற்றிலிருந்து தேர்ந்தெடுக்க.

(A) **கூற்றுகள் (I)** மற்றும் **(II)** சரியானவை.
(B) **கூற்றுகள் (I)** மற்றும் **(II)** தவறானவை.
✓(C) **கூற்று (I)** சரியானது ஆனால் **கூற்று (II)** தவறானது.
(D) **கூற்று (I)** தவறானது ஆனால் **கூற்று (II)** சரியானது.

**94.** **தவறான** கூற்றை கண்டுபிடிக்க :

(A) 0 ஓர் இரட்டை எண்
(B) 6 ஆனது ஒரு செவ்விய எண்
(C) 1 முதல் 100 வரையிலான எண் தொகுதியில் மொத்தம் 25 பகா எண்கள் உள்ளன
✓(D) 1 ஆனது பகு எண் அல்லது பகா எண் ஆகும்

**95.** Add 3 to the number. Then multiply by 7 and subtract 13 and divide now by 5 and the answer is 24 then the number is :

(A) 14 (B) 19
(C) 15 (D) ✓ 16

**96.** The number of even prime numbers between 1 and 50 is :

(A) ✓ 1 (B) 25
(C) 15 (D) 2

**97.** In 6 hours duration, with uniform decrease in temperature, the temperature dropped 42°C. How many degrees did the temperature drop each hour ?

(A) 5°C (B) 6°C
(C) ✓ 7°C (D) 8°C

**98.** Next pattern in the following :
* ADCE, ECGD, IBKC, MAOB, __________

(A) QGTH (B) QHNI
(C) QISJ (D) QESF

**99.** If the code (3, 4) (1, 5) (4, 2) is represent HAT
* and (2, 2) (4, 5) (3, 1) is RDX. Then the code (3, 5) (1, 3) (5, 4) is represent by :

(A) HKY (B) BXR
(C) FUA (D) CLK

**100.** Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | 1 tonne | (i) | 8 grams |
| (b) | 1 quintal | (ii) | 1000 g |
| (c) | 1 soverign | (iii) | 1000 kg |
| (d) | 1 kilogram | (iv) | 100 kg |

(A) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(B) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
(D) (a)-(iii), (b)-(ii), (c)-(i), (d)-(iv)

**95.** ஓர் எண்ணுடன் 3 -ஐ கூட்டுக. பிறகு 7 -ஆல் பெருக்கவும், அதிலிருந்து 13 -ஐக் கழிக்கவும் அதனை 5 -ஆல் வகுத்தால் 24 கிடைக்கும் எனில் அந்த எண் :

(A) 14 (B) 19
(C) 15 (D) ✓ 16

**96.** 1 முதல் 50 வரையுள்ள இரட்டைப் பகா எண்களின் எண்ணிக்கை :

(A) ✓ 1 (B) 25
(C) 15 (D) 2

**97.** ஓர் இடத்தில் வெப்பம் சீராகக் குறைகிறது. மேலும் 6 மணி நேர இடைவெளியின் போது வெப்பம் 42°C குறைந்தது எனில், ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும் குறைந்த வெப்பத்தின் அளவு என்ன ?

(A) 5°C (B) 6°C
(C) ✓ 7°C (D) 8°C

**98.** கீழ்காணும் அமைப்பில் அடுத்து வருவது.
* ADCE, ECGD, IBKC, MAOB, __________

(A) QGTH (B) QHNI
(C) QISJ (D) QESF

**99.** வரிசை ஜோடிகள் (3, 4) (1, 5) (4, 2) என்பது
* HAT எனவும், (2, 2) (4, 5) (3, 1) என்பது RDX எனவும் குறித்தால், (3, 5) (1, 3) (5, 4) என்பது எதனைக் குறிக்கும் ?

(A) HKY (B) BXR
(C) FUA (D) CLK

**100.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | 1 டன் | (i) | 8 கி |
| (b) | 1 குவிண்டால் | (ii) | 1000 கி |
| (c) | 1 சவரன் | (iii) | 1000 கி.கி |
| (d) | 1 கி.கி | (iv) | 100 கி.கி |

(A) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(B) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
(C) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
(D) (a)-(iii), (b)-(ii), (c)-(i), (d)-(iv)

**101.** 1 hand span is equal to :

(A) 24 fingers (B) 12 fingers ✓
(C) 6 fingers (D) 18 fingers

**101.** 1 சாண் அளவுக்கு சமமானது :

(A) 24 விரல்கள் (B) 12 விரல்கள் ✓
(C) 6 விரல்கள் (D) 18 விரல்கள்

**102.** Ram brought 5 litre and 750 ml of water in a bottle to a picnic. His friend drank 1 litre 300 ml from it. How much of water is remaining in the bottle ?

(A) 4540 ml (B) 4 litre 540 ml
(C) 4 litre 450 ml ✓ (D) 4450 litre

**102.** ராம் 5 லி 750 மி.லி கொள்ளளவு கொண்ட தண்ணீர்க் குடுவையை சுற்றுலாவிற்கு கொண்டு வந்தான். அவன் நண்பர்கள் 1 லி 300 மி.லி. தண்ணீர் குடித்து விட்டனர். குடுவையில் உள்ள மீதித் தண்ணீரின் அளவு எவ்வளவு ?

(A) 4540 மி.லி (B) 4 லி 540 மி.லி
(C) 4 லி 450 மி.லி ✓ (D) 4450 லி

**103.** Lakshmi needs 750 ml of milk everyday. If a litre costs ₹ 50 what is the total amount spent by her for a month ?

(A) ₹ 1152 (B) ₹ 1025
(C) ₹ 1125 ✓ (D) ₹ 1225

**103.** லஷ்மிக்கு ஒவ்வொரு நாளும் 750 மி.லி பால் தேவைப்படுகிறது. ஒரு லிட்டர் பாலின் விலை ₹ 50/- எனில், ஒரு மாதத்திற்கு பாலிற்கு செலவாகும் தொகை எவ்வளவு ?

(A) ₹ 1152 (B) ₹ 1025
(C) ₹ 1125 ✓ (D) ₹ 1225

**104.** A book was bought at ₹ 160 and sold at a loss of 10% then its selling price is :

(A) ₹ 170 (B) ₹ 150
(C) ₹ 144 ✓ (D) ₹ 174

**104.** ஒரு புத்தகம் ₹ 160 -க்கு வாங்கப்பட்டு, 10% நட்டத்தில் விற்றால், அதன் விற்பனை விலை :

(A) ₹ 170 (B) ₹ 150
(C) ₹ 144 ✓ (D) ₹ 174

**105.** Which among the following rate of interest yields on interest of ₹ 270 for the principal of ₹ 1800 for one year ?

(A) 10% (B) 20%
(C) 25% (D) 15% ✓

**105.** பின்வரும் வட்டி வீதங்களில் எந்த வட்டி வீதத்திற்கு அசல் ₹ 1800 -க்கு ஒரு வருடத்திற்கு தனி வட்டியாக ₹ 270 கிடைக்கும் ?

(A) 10% (B) 20%
(C) 25% (D) 15% ✓

**106.** In a particular year, additionally we have two days Monday and Tuesday except from complete weeks, then the first day of the year will fall in :

(A) Sunday
(B) Monday ✓
(C) Tuesday
(D) Wednesday

**106.** ஒரு குறிப்பிட்ட ஆண்டில் முழு வாரங்களைத் தவிர்த்து கூடுதலாக திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகள் வருகிறது எனில், அந்த வருடத்தின் முதல் நாள் :

(A) ஞாயிற்றுக் கிழமை
(B) திங்கள் கிழமை ✓
(C) செவ்வாய் கிழமை
(D) புதன் கிழமை

**107.** Father is 7 times as old of his son. After 3 years father will be 4 times as old as his son, then the present age of son and father respectively are :

(A) 4, 28 (B) ✓ 3, 21

(C) 5, 35 (D) 6, 42

**108.** An accurate clock shows 7 a.m. Through how many degrees will the hour hand rotate when the clock shows 1 p.m. ?

(A) 90° (B) ✓ 180°

(C) 100° (D) 110°

**109.** Match the following :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | 1 km | (i) | 800 mm |
| (b) | 1 mile | (ii) | 75,000 cm |
| (c) | $\frac{3}{4}$ km | (iii) | 1,00,000 cm |
| (d) | $\frac{4}{5}$ m | (iv) | 1.610 km |

Choose the **correct** answer from the options below :

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

(B) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

(C) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)

**110.** The clock is set at 6 a.m. If the clock slows down four minutes every hour. Find the time shown by the clock at 7 p.m.

(A) 6:52 p.m (B) 6:52 a.m

(C) 5:52 a.m (D) ✓ 6:08 p.m

**107.** ஓர் தந்தை தன் மகனின் வயதினைப்போல் 7 மடங்கு வயதில் பெரியவர். 3 ஆண்டு-களுக்குப் பிறகு அப்பாவின் வயது, மகனின் வயதைப் போல் 4 மடங்கு எனில், மகன் மற்றும் தந்தையின் தற்போதைய வயதுகள் முறையே :

(A) 4, 28 (B) ✓ 3, 21

(C) 5, 35 (D) 6, 42

**108.** கடிகாரம் ஒன்று சராசரியாக 7 a.m. எனக் காட்டுகிறது எனில், 1 p.m. -ன் போது மணி முள்ளானது நகரும் கோணத்தின் மதிப்பு :

(A) 90° (B) ✓ 180°

(C) 100° (D) 110°

**109.** கீழ்கண்டவற்றை பொருத்துக :

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | 1 கி.மீ | (i) | 800 மி.மீ. |
| (b) | 1 மைல் | (ii) | 75,000 செ.மீ. |
| (c) | $\frac{3}{4}$ கி.மீ | (iii) | 1,00,000 செ.மீ. |
| (d) | $\frac{4}{5}$ மீ | (iv) | 1.610 கி.மீ. |

கீழ்கண்டவற்றில் **சரியான** விடையை தெரிவு செய்க.

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

(B) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

(C) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)

**110.** முற்பகல் 6 மு.ப மணிக்கு சரியான நேரத்தில் வைக்கப்பட்ட ஒரு கடிகார-மானது மணிக்கு 4 நிமிடங்கள் வீதம் தாமதமாக இயங்கினால் இரவு 7 பி.ப மணிக்கு அக்கடிகாரம் காட்டும் நேரத்தைக் கணக்கிடுக.

(A) 6:52 பி.ப (B) 6:52 மு.ப

(C) 5:52 மு.ப (D) ✓ 6:08 பி.ப

**111.** The quarter share, half share and three-fourth share of ₹ 1,00,000 are respectively :

(A)✓ ₹ 25,000, ₹ 50,000, ₹ 75,000
(B) ₹ 40,000, ₹ 20,000, ₹ 30,000
(C) ₹ 25,000, ₹ 5,000, ₹ 30,000
(D) ₹ 40,000, ₹ 25,000, ₹ 75,000

**112.** Kumar deposites $\frac{3}{4}$ part of ₹ 24,000 in a bank. He gives the remaining amount to his two daughters equally. How much amount will they get individually ?

(A) 6,000 (B)✓ 3,000
(C) 4,500 (D) 4,000

**113.** Which is **correct** ?

(A) $2.945 = \frac{579}{200}$ (B)✓ $2.176 = \frac{272}{125}$
(C) $0.35 = \frac{5}{20}$ (D) $0.28 = \frac{7}{250}$

**114.** **Statement (I) :**
A ratio has no unit.
**Statement (II) :**
Order of the terms in a ratio cannot be reversed.
In light of the above statements, choose the **most appropriate** answer from the options given below :

(A)✓ Both **Statement (I)** and **Statement (II)** are correct.
(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.
(C) **Statement (I)** is correct, but **Statement (II)** is incorrect.
(D) **Statement (I)** is incorrect, but **Statement (II)** is correct.

**111.** ₹ 1,00,000 -ல் கால் பங்கு, அரை பங்கு மற்றும் நான்கில் மூன்று பங்குகள் முறையே.

(A)✓ ₹ 25,000, ₹ 50,000, ₹ 75,000
(B) ₹ 40,000, ₹ 20,000, ₹ 30,000
(C) ₹ 25,000, ₹ 5,000, ₹ 30,000
(D) ₹ 40,000, ₹ 25,000, ₹ 75,000

**112.** குமார் என்பவர் ₹ 24,000 -ல் $\frac{3}{4}$ பகுதியை வங்கியில் முதலீடு செய்கிறார். மீதமுள்ள தொகையில் தம் இரு மகள்களுக்கு சரி சமமாக பிரித்தளிக்கிறார் எனில், அவரின் ஒவ்வொரு மகளும் பெறும் தொகை எவ்வளவு ?

(A) 6,000 (B)✓ 3,000
(C) 4,500 (D) 4,000

**113.** பின்வருவனவற்றுள் எது **சரியானது** ?

(A) $2.945 = \frac{579}{200}$ (B)✓ $2.176 = \frac{272}{125}$
(C) $0.35 = \frac{5}{20}$ (D) $0.28 = \frac{7}{250}$

**114.** **கூற்று (I) :**
விகிதத்திற்கு அலகு இல்லை.
**கூற்று (II) :**
விகிதத்தின் உறுப்புகளின் வரிசையை மாற்ற முடியாது.
மேற்கண்ட கூற்றுகளில், **மிகப் பொருத்தமான** விடையைக் குறிப்பிடுக.

(A)✓ **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரியானவை.
(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறானவை.
(C) **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.
(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**115.** Two sisters were playing in a room. A pearl necklace of one of them got cut off. Out of the total pearls in the necklace, one-third fell down on the floor, one-fifth fell on the bed, while the pearls falling down one sister collects one-sixth and another collects one-fifteenth. If 70 pearls remain in the necklace, then the total number of pearls in the necklace is :

(A) 400 pearls (B) 250 pearls

(C) ✓ 300 pearls (D) 350 pearls

**116.** Given below are the two **statements** :

**Statement (I) :**

$5^0 < \sqrt{25} < \left(\sqrt[3]{125}\right)^2 < \left(\sqrt[4]{125}\right)^4$

**Statement (II) :**

$10^5 > 100^2 > 10^3 > 100 > 10^0$

(A) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(B) ✓ Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(C) **Statement (I)** is correct, but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect, but **Statement (II)** is correct.

**117.** Which of the following has $(x-1)$ as a factor ?

(A) ✓ $x^4-1$ (B) $x^4+1$

(C) $x^2+1$ (D) $x^2+4x+4$

**115.** இரு சகோதரிகள் ஒரு அறையில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒருவரின் முத்துமாலை அறுந்துவிட்டது. அம்மாலையில் இருந்த மொத்த முத்துக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு தரையில் விழுந்தன. ஐந்தில் ஒரு பங்கு கட்டிலின் மீது விழுந்தன. விழுந்து கொண்டிருந்த முத்துகளில் ஒருவர் ஆறில் ஒரு பங்கும், மற்றொருவர் பதினைந்தில் ஒரு பங்கும் கீழே விழாமல் சேகரித்தனர். அம்மாலையில் 70 முத்துகள் மட்டுமே மீதமிருந்தால், அதிலிருந்த மொத்த முத்துகள் எத்தனை ?

(A) 400 முத்துகள் (B) 250 முத்துகள்

(C) ✓ 300 முத்துகள் (D) 350 முத்துகள்

**116.** கீழே இரண்டு **கூற்றுகள்** கொடுக்கப்பட்டுள்ளன.

**கூற்று (I) :**

$5^0 < \sqrt{25} < \left(\sqrt[3]{125}\right)^2 < \left(\sqrt[4]{125}\right)^4$

**கூற்று (II) :**

$10^5 > 100^2 > 10^3 > 100 > 10^0$

(A) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(B) ✓ **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(C) **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**117.** கீழ்கண்டவற்றில் எதற்கு $(x-1)$ ஒரு காரணி ஆகும் ?

(A) ✓ $x^4-1$ (B) $x^4+1$

(C) $x^2+1$ (D) $x^2+4x+4$

**118.** Given are the two **statements** :

**Statement (I) :**

A linear equation in two variables represents a straight line in '$xy$'-plane.

**Statement (II) :**

$2xy - 3 = 7$ is a linear equation.

(A) Both **Statements (I)** and **(II)** are true.

(B) Both **Statements (I)** and **(II)** are false.

(C) ✓ **Statement (I)** is true, but **Statement (II)** is false.

(D) **Statement (I)** is false, but **Statement (II)** is true.

**119.** A total of 100 currency notes, consisting of ₹ 5 and ₹ 10 denominations amount to ₹ 600. Then the number of notes in each denomination is :

(A) (60, 40) notes

(B) (50, 50) notes

(C) ✓ (80, 20) notes

(D) (75, 25) notes

**120.** The volume of the cube with side $(x+5)$ cm is :

(A) ✓ $(x^3 + 15x^2 + 75x + 125)$ cm$^3$

(B) $(x^3 + 75x^2 + 15x + 125)$ cm$^3$

(C) $(x^3 + 125x^2 + 15x + 75)$ cm$^3$

(D) $(5x^3 + 15x^2 + 75x + 125)$ cm$^3$

**118.** கீழே இரண்டு **கூற்றுகள்** உள்ளன.

**கூற்று (I) :**

இரு மாறிகளில் அமைந்த ஒரு நேரிய சமன்பாடு '$xy$' -தளத்தில் ஒரு நேர்க் கோட்டை குறிக்கும்.

**கூற்று (II) :**

$2xy - 3 = 7$ என்பது ஒரு நேரிய சமன்பாடு ஆகும்.

(A) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(C) ✓ **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**119.** ₹ 5 மற்றும் ₹ 10 மதிப்புகளை மட்டுமே கொண்ட 100 பணத்தாள்கள் உள்ளன. அதன் மதிப்பு ₹ 600 எனில், ஒவ்வொரு மதிப்புடைய பணத்தாளும் எத்தனை உள்ளன ?

(A) (60, 40) பணத் தாள்கள்

(B) (50, 50) பணத் தாள்கள்

(C) ✓ (80, 20) பணத் தாள்கள்

(D) (75, 25) பணத் தாள்கள்

**120.** $(x+5)$ செ.மீ பக்க அளவுள்ள கனசதுரத்தின் கனஅளவு :

(A) ✓ $(x^3 + 15x^2 + 75x + 125)$ செ.மீ$^3$

(B) $(x^3 + 75x^2 + 15x + 125)$ செ.மீ$^3$

(C) $(x^3 + 125x^2 + 15x + 75)$ செ.மீ$^3$

(D) $(5x^3 + 15x^2 + 75x + 125)$ செ.மீ$^3$

**121.** An indigenous crop of India is :

(A) Sugarcane (B) Tobacco
(C) ✓ Rice (D) Wheat

**122.** Which Temple has the longest set of corridors in the world ?

(A) Jalagandeshwar Temple
(B) Adinatha Temple
(C) ✓ Ramanathaswamy Temple
(D) Varadharaja Perumal Temple

**123.** Who was the bravest leader of the Great revolt of 1857 by British Historians ?

(A) Tantia Tope
(B) Bahadur Shah II
(C) Mangal Pandey
(D) ✓ Rani Lakshmi Bai

**124.** **Assertion (A) :**
Setu Bharatam e-program was launched in 2016 for building bridges for safe and seamless travel on National Highways.

**Reason (R) :**
It aims to make all National Highways free of railway level crossing by 2019.

In light of the above statements, choose the **most appropriate** answer from the options given below :

(A) ✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.
(B) Statement **(A)** is correct But **(R)** is incorrect
(C) Statement **(A)** is incorrect But **(R)** is correct
(D) Both **(A)** and **(R)** are incorrect.

**121.** இந்தியாவின் பூர்வீகப் பயிர் :

(A) கரும்பு (B) புகையிலை
(C) ✓ நெல் (D) கோதுமை

**122.** உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்களை கொண்ட கோவில் எது ?

(A) ஜலகண்டேஸ்வரர் கோவில்
(B) ஆதிநாதர் கோவில்
(C) ✓ இராமநாத சுவாமி கோவில்
(D) வரதராஜ பெருமாள் கோவில்

**123.** 1857 -ம் ஆண்டு புரட்சியில் கலந்து கொண்டவர்களில் மிகவும் துணிச்சலானவர் என ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர் ?

(A) தாந்தியா தோபே
(B) இரண்டாம் பகதூர் ஷா
(C) மங்கள் பாண்டே
(D) ✓ ராணி லட்சுமி பாய்

**124.** **கூற்று (A) :**
சேது பாரதம் திட்டமானது தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாகவும், தடையற்ற பயணம் மேற்கொள்ள பாலங்களைக் கட்டுவதற்கான திட்டம் 2016 இல் தொடங்கப்பட்டது.

**காரணம் (R) :**
அது 2019 -ம் ஆண்டிற்குள் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும், இருப்பு பாதை குறுக்கீடு இல்லாமல் உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

மேற்கண்ட **கூற்றுகளில் மிகவும் ஏற்புடைய** விடையினை தெரிவு செய்க.

(A) ✓ **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் சரி, **காரணம் (R) கூற்றை (A)** விளக்குகிறது.
(B) **கூற்று (A)** சரி ஆனால் **காரணம் (R)** தவறு.
(C) **கூற்று (A)** தவறு ஆனால் **காரணம் (R)** சரி.
(D) **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் தவறு.

**125.** Match the following :

| | List-I | | List-II |
|---|---|---|---|
| (a) | Community Development Programme | (i) | 1950 |
| (b) | National Extension Service | (ii) | 1957 |
| (c) | Madras Village Panchayat Act | (iii) | 1952 |
| (d) | Reform of local administration | (iv) | 1953 |

Choose the correct Answer from the options given below.

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(B) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

(C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

**126.** **Statement (I) :**

The longest National Highway is NH-44 which runs from Srinagar to Kanniyakumari.

**Statement (II) :**

Golden Quadrilateral Road connects Delhi, Chennai, Mumbai, Kolkata.

(A) **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(B) Both **Statement (I), (II)** are incorrect.

(C) **Statement (I)** is incorrect **Statement (II)** is correct.

(D) ✓ **Statement (I), (II)** are correct.

**125.** பொருத்துக :

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| (a) | சமூக அபிவிருத்தி திட்டம் | (i) | 1950 |
| (b) | தேசிய நீட்டிப்பு சேவை | (ii) | 1957 |
| (c) | மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் | (iii) | 1952 |
| (d) | உள்ளூர் நிர்வாக சீர்த்திருத்தங்கள் | (iv) | 1953 |

கீழே கொடுக்கப்பட்டவற்றில் **சரியான** விடையைத் தெரிவு செய்க.

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(B) ✓ (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

(C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

**126.** **வாக்கியம் (I) :**

மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH-44 ஆனது ஸ்ரீநகர் முதல் கன்னியாகுமரி வரை செல்கிறது.

**வாக்கியம் (II) :**

தங்க நாற்கர சாலை திட்டமானது சென்னை, மும்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய நகரங்களை இணைக்கிறது.

(A) **வாக்கியம் (I)** சரி ஆனால் **வாக்கியம் (II)** தவறானது.

(B) **வாக்கியம் (I), (II)** இரண்டுமே தவறானது.

(C) **வாக்கியம் (I)** தவறு ஆனால் **வாக்கியம் (II)** சரி.

(D) ✓ **வாக்கியம் (I), (II)** இரண்டுமே சரி.

**127.** Match **List-I** with **List-II**.

| | **List-I (Waterfalls)** | | **List-II (District)** |
|---|---|---|---|
| (a) | Kutladampatti | (i) | Coimbatore |
| (b) | Kiliyur | (ii) | The Nilgiri |
| (c) | Catherine | (iii) | Salem |
| (d) | Sengupathi | (iv) | Madurai |

Choose the **correct** answer from the options given below.

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(D) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

**127.** பட்டியல்-I -ஐ பட்டியல்-II உடன் பொருத்துக.

| | **பட்டியல்-I (நீர்வீழ்ச்சிகள்)** | | **பட்டியல்-II (மாவட்டங்கள்)** |
|---|---|---|---|
| (a) | குட்லாடம்பட்டி | (i) | கோயம்புத்தூர் |
| (b) | கிள்ளியூர் | (ii) | நீலகிரி |
| (c) | கேத்தரின் | (iii) | சேலம் |
| (d) | செங்குபதி | (iv) | மதுரை |

கீழே கொடுக்கப்பட்டவற்றில் **சரியான** விடையை தேர்ந்தெடு.

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
(D) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

**128.** Given below are two **statements.**

**Statement (I) :**
The Great Barrier reef is the world's largest coral reef system. Coral reefs are built by billions of tiny organisms, known as coral polyps.

**Statement (II) :**
This coral reef system composed 2000 individual reefs and stretching for about 2900 km. It covers an area of about 3,50,000 sq.km.

Carefully read the Statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) **Statement (I)** is incorrect; **Statement (II)** is correct.
(B) **Statement (I)** and **Statement (II)** are incorrect.
(C) ✓ **Statement (I)** is correct; **Statement (II)** is incorrect.
(D) **Statement (I)** and **Statement (II)** are correct.

**128.** கீழே இரண்டு **கூற்றுகள்** கொடுக்கப் பட்டுள்ளன.

**கூற்று (I) :**
உலகின் மிக நீளமான பவளப்பாறைத் திட்டு 'தி கிரேட் பேரியர் ரீப்' ஆகும். பல பில்லியன் நுண்ணிய உயிரியான பவள மொட்டுக்களால் இவை உருவாக்கப் படுகின்றன.

**கூற்று (II) :**
இப்பவளப்பாறை 2000 தனித்த பவளத் திட்டுகளையும் 2900 கி.மீ நீண்டு மற்றும் 3,50,000 சதுர கி.மீ பரந்து காணப்படுகிறது.

கொடுக்கப்பட்ட கூற்றுகளை கவனமாக படித்து **சரியான** ஒன்றினை தேர்வு செய்க.

(A) **கூற்று (I)** தவறானவை; **கூற்று (II)** சரியானவை.
(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** தவறானவை.
(C) ✓ **கூற்று (I)** சரியானவை; **கூற்று (II)** தவறானவை.
(D) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** சரியானவை.

**129.** The first Metro Rail Service started in :

(A) Bengaluru (B)✓ Kolkata

(C) Mumbai (D) New Delhi

**130.** Match the following with **List-I** and **List-II**.

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | October 2 | (i) | Labourer day |
| (b) | March 22 | (ii) | Local Governance day |
| (c) | November 1 | (iii) | World water day |
| (d) | May 1 | (iv) | Gandhi Jayanthi |

Identify and match the **correct** answers.

(A)✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

**131. Assertion-(A) Reason-(R) :**

**Assertion (A) :**

Mumbai makes it as Manchester of India.

**Reason (R) :**

The higher concentration of textile mills in and around Mumbai makes it as "Manchester".

Choose the **most appropriate** answer.

(A) **(A)** is correct **(R)** is false.
(B)✓ **(A)** and **(R)** both are correct.
(C) **(A)** and **(R)** false.
(D) **(A)** is correct **(R)** does not explain.

**129.** மெட்ரோ இரயில் சேவை இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்டது :

(A) பெங்களூரு (B)✓ கொல்கத்தா

(C) மும்பை (D) புது டெல்லி

**130.** **பட்டியல்-I** -ஐ **பட்டியல்-II** உடன் பொருத்துக.

| பட்டியல்-I | | பட்டியல்-II | |
|---|---|---|---|
| (a) | அக்டோபர் 2 | (i) | உழைப்பாளர் தினம் |
| (b) | மார்ச் 22 | (ii) | உள்ளாட்சி தினம் |
| (c) | நவம்பர் 1 | (iii) | உலக தண்ணீர் நாள் |
| (d) | மே 1 | (iv) | காந்தி பிறந்த தினம் |

கீழே உள்ளவற்றில் **சரியாக** பொருந்தியுள்ளதை தேர்ந்தெடுத்து எழுதவும்.

(A)✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

**131. கூற்று-(A) காரணம்-(R) :**

**கூற்று (A) :**

மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகின்றது.

**காரணம் (R) :**

மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மான்செஸ்டர் என அழைக்கப்படுகின்றது.

**சரியானதை** தேர்ந்தெடு.

(A) **கூற்று** சரி **காரணம்** தவறு.
(B)✓ **கூற்றும், காரணமும்** சரி.
(C) **கூற்றும், காரணமும்** தவறு.
(D) **கூற்று** சரி, **காரணம்** சரியாக விளக்கப்படவில்லை.

**132.** Choose the **wrong** one :

(A) The deepest point in the Indian Ocean is the Java Trench.

(B) The deepest point in the Pacific Ocean is the Mariana Trench.

(C) The deepest point in the Southern Ocean is South Sandwich Trench.

(D) ✓ The deepest point in the Atlantic Ocean is St. Helena Trench.

**132.** **தவறான** ஒன்றை தேர்ந்தெடுக்கவும் :

(A) இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதி ஜாவா அகழியாகும்.

(B) பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதி மரியானா அகழியாகும்.

(C) தென் பெருங்கடலின் ஆழமான பகுதி தென் சான்ட்விச் அகழி ஆகும்.

(D) ✓ அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழமான பகுதி செயின்ட் ஹெலனா அகழி ஆகும்.

**133.** Which of the following options is **correctly** paired ?

| | | | |
|---|---|---|---|
| (A) | Angiosperm | - | Leaves grow upto 3 metres across |
| (B) ✓ | Gymnosperm | - | Seeds are not enclosed within fruit |
| (C) | Riccia | - | Flowering plant |
| (D) | Victoria amazonica | - | Xerophyte |

**133.** கீழே கொடுக்கப்பட்டுள்ள பதங்களில் எது **சரியான** இணையை பெற்றுள்ளது ?

| | | | |
|---|---|---|---|
| (A) | ஆஞ்சியோஸ் பெர்ம் | - | இலைகள் மூன்று மீட்டர் விட்டம் வரை வளரக் கூடியது. |
| (B) ✓ | ஜிம்னோஸ் பெர்ம் | - | விதைகள் கனிகளால் சூழப்பட்டிருக்-காது |
| (C) | ரிக்ஸியா | - | பூக்கும் தாவரம் |
| (D) | விக்டோரியா அமேசோ - னிக்கா | - | வறண்ட நிலத் தாவரம் |

**134.** **Statement (I) :**

Chlorella pyrenoidosa is used in space travel.

**Statement (II) :**

During space travel, this algae is used to get rid of $CO_2$ and to decompose human wastes.

(A) ✓ Both **statements (I)** and **(II)** are correct.

(B) Both **statements (I)** and **(II)** are incorrect.

(C) **Statement (I)** is correct but **statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **statement (II)** is correct.

**134.** **கூற்று (I) :**

விண்வெளிப் பயணத்தின்போது குளோரெல்லா ஃபைரினாய்டோசா என்னும் பாசி எடுத்துச் செல்லப்படுகிறது.

**கூற்று (II) :**

இது விண்வெளிப் பயணத்தின்போது கரிமில வாயுவை அகற்றுவதற்கும் மற்றும் மனிதக் கழிவுகளை மட்கச் செய்வதற்கும் பயன்படுகிறது.

(A) ✓ **கூற்று (I)** மற்றும் **(II)** சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **(II)** தவறு.

(C) **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**135. Statement (I) :**

The largest flower in the world is Rafflesia.

**Statement (II) :**

This rare flower is found in the rainforests of Indonesia.

(A) ✓ **Statement (I)** and **statement (II)** are correct.

(B) **Statement (I)** and **statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct and **statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect and **statement (II)** is correct.

**136.** Match the **List-I** with **List-II** :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Flower that blooms in summer | (i) | Flamelily |
| (b) | Flower that blooms in autumn | (ii) | Firecracker |
| (c) | Flower that blooms in winter | (iii) | Saffron |
| (d) | Flower that blooms in all season | (iv) | Rose |

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)

(D) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

**135. கூற்று (I) :**

உலகின் மிகப்பெரிய மலர் ரஃப்ளேசியா ஆகும்.

**கூற்று (II) :**

இந்தோனேஷியாவில் உள்ள மழைக்-காடுகளில் இந்த அரிய வகை மலர் காணப்படுகிறது.

(A) ✓ **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(C) **கூற்று (I)** சரி, **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு, **கூற்று (II)** சரி.

**136. வரிசை-I** -யை **வரிசை-II** உடன் பொருத்துக.

| வரிசை-I | | வரிசை-II | |
|---|---|---|---|
| (a) | கோடை காலத்தில் பூக்கும் மலர் | (i) | செங்காந்தள் |
| (b) | இலையுதிர் காலத்தில் பூக்கும் மலர் | (ii) | கனகாம்பரம் |
| (c) | குளிர் காலத்தில் பூக்கும் மலர் | (iii) | குங்குமப்பூ |
| (d) | அனைத்து காலத்திற்கும் பூக்கும் மலர் | (iv) | ரோஜா |

(A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)

(D) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

**137.** Given below are two statements :

**Statement (I) :**

Vermiculture involves the cultivation of earthworms for the production of compost from organic wastes.

**Statement (II) :**

Earthworms feeds on the organic waste and excrete it in digested from known as castings.

(A) ✓ Both **statement (I)** and **statement (II)** are correct.

(B) Both **statement (I)** and **statement (II)** are incorrect.

(C) **Statement (I)** is correct and **statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect and **statement (II)** is correct.

**138. Statement (I) :**

While you are travelling in a bus when a sudden brake is applied the upper part of your body leans in the forward direction.

**Statement (II) :**

The non-resistance of a body to change its state of motion is called inertia of motion.

(A) Both **Statement (I)** and **Statement (II)** are correct.

(B) Both **Statement (I)** and **Statement (II)** are incorrect.

(C) ✓ **Statement (I)** is correct but **Statement (II)** is incorrect.

(D) **Statement (I)** is incorrect but **Statement (II)** is correct.

**137.** இரு **கூற்றுகள்** கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**கூற்று (I) :**

மண்புழுவை வளர்த்து அதன் மூலம் மண்புழு உரம் தயாரித்தலை மண்புழு வளர்ப்பு என்கிறோம்.

**கூற்று (II) :**

மண்புழுக்கள் கரிம பொருள்களை உண்டு எச்சத்தை வெளியேற்றுகின்றன. இது மண்புழு உரம் எனப்படும்.

(A) ✓ **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(C) **கூற்று (I)** சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**138. கூற்று (I) :**

நாம் பேருந்தில் பயணம் செய்யும் போது திடீரென அவை நிறுத்தப்படும் போது நமது உடல் முன்னோக்கி சாய்கின்றது.

**கூற்று (II) :**

இயக்க நிலையில் உள்ள பொருள், தமது இயக்க நிலை மாற்றத்தை எதிர்க்க முடியாத பண்பு இயக்கத்தில் நிலைமம் எனப்படும்.

(A) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் சரி.

(B) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** இரண்டும் தவறு.

(C) ✓ **கூற்று (I)** மட்டும் சரி ஆனால் **கூற்று (II)** தவறு.

(D) **கூற்று (I)** மட்டும் தவறு ஆனால் **கூற்று (II)** சரி.

**139.** Match **List-I** with **List-II** :

| | | | |
|---|---|---|---|
| (a) | Coelenterata | (i) | Snail |
| (b) | Platyhelminthes | (ii) | Starfish |
| (c) | Echinodermata | (iii) | Tapeworm |
| (d) | Mollusca | (iv) | Hydra |

Choose the **correct** answer from the options given below :

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(D) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

**140.** Find out the warm blooded class __________.

(A) Pisces (B) Aves
(C) Amphibia (D) Reptilia

**141.** Given below are two statements find out the answer :

**Statement (I) :**
Birds show two types of flight gliding and flapping.

**Statement (II) :**
The wings and tail have long feathers which help in flying.

In the light of the above statement choose the **most appropriate** answer from the option given below.

(A) **Statement (I)** and **statement (II)** are incorrect.
(B) **Statement (I)** is correct and **statement (II)** is incorrect.
(C) **Statement (I)** is incorrect and **statement (II)** is correct.
(D) **Statement (I)** and **statement (II)** are correct.

**139.** **வரிசை-I** -யை **வரிசை-II** உடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குழியுடலிகள் | (i) | நத்தை |
| (b) | தட்டைப் புழுக்கள் | (ii) | நட்சத்திர மீன் |
| (c) | முட்தோலிகள் | (iii) | நாடாப் புழு |
| (d) | மெல்லுடலிகள் | (iv) | ஹைட்ரா |

கீழ்கண்டவற்றுள் **சரியான** விடையை தேர்ந்தெடு.

(A) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
(C) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
(D) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

**140.** கீழ்கண்டவற்றுள் எது வெப்ப இரத்த வகுப்பு ?

(A) மீன்கள் (B) பறவைகள்
(C) இருவாழ்விகள் (D) ஊர்வன

**141.** கீழ்கண்ட இரண்டு **வாக்கியங்களில்** **சரியான** விடையை தெரிந்தெடுக்கவும்.

**கூற்று (I) :**
பறவைகள் பறக்கும்போது மிதந்து ஊர்தல், மற்றும் இறக்கைகளை அசைத்துப் பறத்தல் என இரண்டு வகைகளை காணமுடியும்.

**கூற்று (II) :**
பறப்பதற்கு உதவக்கூடிய நீண்ட இறகுகள் வால் மற்றும் இறக்கைகளில் உள்ளன.

மேற்கண்ட **கூற்றுகளின்** அடிப்படையில் **சரியான** விடையை தேர்ந்தெடுக்கவும்.

(A) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** -ம் தவறு.
(B) **கூற்று (I)** சரி **கூற்று (II)** தவறு.
(C) **கூற்று (I)** தவறு **கூற்று (II)** சரி.
(D) **கூற்று (I)** மற்றும் **கூற்று (II)** -ம் சரி.

**142.** Find out the **correct** answer matching with **List-I** and **List-II** :

| | | | |
|---|---|---|---|
| (a) | Meghaamalai wild life sanctuary | (i) | Kanchipuram |
| (b) | Kalakad wild life sanctuary | (ii) | Virudhunagar |
| (c) | Grizzled Squirrel wild life sanctuary | (iii) | Thirunelveli |
| (d) | Vedanthangal wild life sanctuary | (iv) | Theni |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(B) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

(C) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

(D) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)

**142.** **வரிசை-I** -வுடன் **வரிசை-II** -ஐ பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடுக்கவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | மேகமலை வன விலங்கு சரணாலயம் | (i) | காஞ்சிபுரம் |
| (b) | களக்காடு வன விலங்கு சரணாலயம் | (ii) | விருதுநகர் |
| (c) | சாம்பல் நிற அணில் வன விலங்கு சரணாலயம் | (iii) | திருநெல்வேலி |
| (d) | வேடந்தாங்கல் வனவிலங்கு சரணாலயம் | (iv) | தேனி |

(A) ✓ (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(B) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

(C) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

(D) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)

**143.** Viviparous animals have the unique characteristic feature is __________.

(A) Egg

(B) Yolk laden egg

(C) ✓ Placenta

(D) Calcareous shell egg

**143.** குட்டி ஈனுபவைகளின் சிறப்பம்சம் __________.

(A) முட்டை

(B) கருவுணவு முட்டை

(C) ✓ தாய்-சேய் இணைப்பு திசு

(D) கால்சியம் மிகுந்த ஓடுடையவை

Prepp
Your Personal Exams Guide



**144.** Given below are two statements, one is labelled as **Assertion (A)** and other one labelled as **Reason (R)**.

**Assertion (A) :**

Balanced diet contains adequate amount of all the necessary nutrients.

**Reason (R) :**

Balanced diet helps in proper growth, physical and mental health.

In the light of the above statements, choose the **most appropriate** answer from the options given below.

(A) ✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.

(B) Both **(A)** and **(R)** are correct, but **(R)** is not the correct explanation of **(A)**.

(C) **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is not correct but **(R)** is correct.

**144.** கீழே இரண்டு **வாக்கியங்கள்** கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு வாக்கியம் **கூற்றாகவும் (A)** மற்றொரு வாக்கியம் **காரணமாகவும் (R)** கொடுக்கப்பட்டுள்ளது.

**கூற்று (A) :**

சரிவிகித உணவு சரியான உடல் வளர்ச்சிக்கும் மற்றும் மன நலத்திற்கும் உதவுகிறது.

**காரணம் (R) :**

சரிவிகித உணவு சரியான உடல் வளர்ச்சிக்கும் மற்றும் மன நலத்திற்கும் உதவுகிறது.

மேற்காணும் **வாக்கியங்களை** கவனமாக படித்து கீழ்கண்டவற்றுள் **பொருத்தமான** விடையை தேர்ந்தெடு.

(A) ✓ **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் சரி, **காரணம் (R)** என்பது **(A)**-வுக்கான சரியான விளக்கமாகும்.

(B) **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் சரி, ஆனால் **காரணம் (R), (A)**-வுக்கான சரியான விளக்கம் அல்ல.

(C) **கூற்று (A)** சரி ஆனால் **காரணம் (R)** தவறு.

(D) **கூற்று (A)** தவறு ஆனால் **காரணம் (R)** சரி.

**145.** Given below are two statements, one is labelled as **Assertion (A)** and other one labelled as **Reason (R)**.

**Assertion (A) :**

Egg and Rice are cooked by immersing in boiling water, so that it becomes soft.

**Reason (R) :**

Mostly we cannot eat all the food items in raw form.

In the light of the above statements, choose the **most appropriate** answer from the options given below.

(A)✓ Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**

(B) Both **(A)** and **(R)** are correct, but **(R)** is not the correct explanation of **(A)**

(C) **(A)** is correct but **(R)** is not correct

(D) **(A)** is not correct but **(R)** is correct

**145.** கீழே இரண்டு **வாக்கியங்கள்** கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று **கூற்றாகவும் (A)** மற்றொரு வாக்கியம் **காரணமாகவும் (R)** கொடுக்கப்பட்டுள்ளது.

**கூற்று (A) :**

முட்டை மற்றும் அரிசி கொதிக்கும் நீரில் மூழ்கவைத்து சமைக்கப்படுகிறது. இதனால் உணவுப் பொருளானது மிருதுவாகிறது.

**காரணம் (R) :**

பொதுவாக அனைத்து உணவுப் பொருட்களையும் நம்மால் பச்சையாக உண்ணமுடியாது.

மேற்காணும் **வாக்கியங்களை** கவனமாக படித்து கீழ்க்காணும் விடைகளில் **பொருத்தமான** விடையை தேர்ந்தெடு.

(A)✓ **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மற்றும் **(R)** ஆனது **(A)** -விற்கான சரியான விளக்கம்.

(B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)**, **(A)** -விற்கான சரியான விளக்கமில்லை.

(C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.

(D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

**146.** Given below are two statements, one is labelled as **Assertion (A)** and the other one labelled as **Reason (R)**.

**Assertion (A) :**

Destruction of forests in order to make the land available for different uses is known as deforestation.

**Reason (R) :**

It has also resulted in the extinction of several species of animals and plants.

In light of the above statements, choose the **most appropriate** answer from the options given below :

(A) Both **(A)** and **(R)** are correct and **(R)** is the correct explanation of **(A)**.

(B) ✓ Both **(A)** and **(R)** are correct but **(R)** is not the correct explanation of **(A)**.

(C) **(A)** is correct but **(R)** is not correct.

(D) **(A)** is not correct but **(R)** is correct.

**147.** Choose the **incorrect** statement from the following.

(A) In Taraxacum officinale, the movement of a part of a plant in response to light is known as Photonasty.

(B) The movement of Mimosa pudica leaves response to touch is known as Thigmonasty.

(C) ✓ The root system is negatively geotropic and positively phototropic.

(D) The movement of Tulip flower is associated with change in temperature and is known as Thermonasty.

**146.** கீழ்காண் இரண்டு **கூற்றுகளில்,** ஒன்று **கூற்று (A)** மற்றும் மற்றொன்று **காரணம் (R).**

**கூற்று (A) :**

பல்வேறு தேவைகளுக்கு நிலப்பரப்பைப் பயன்படுத்துவதற்காக காடுகளை அழிப்பதை காடு அழிப்பு என்கிறோம்.

**காரணம் (R) :**

பல்வேறு தாவர மற்றும் விலங்கு சிற்றினங்களின் அழிவிற்கும் காடுகள் அழிப்பு காரணமாக உள்ளது.

மேற்காண் **கூற்றுகளின்படி,** கீழ்க்-காண்பனவற்றில் **மிகவும் பொருத்தமான** விடையை தேர்ந்தெடுக்கவும்.

(A) **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் சரி மற்றும் **காரணம் (R) கூற்று (A)** -விற்கு சரியான விளக்கமாகும்.

(B) ✓ **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டும் சரி ஆனால் **காரணம் (R) கூற்று (A)** -விற்கு சரியான விளக்கம் அல்ல.

(C) **கூற்று (A)** சரி ஆனால் **காரணம் (R)** தவறு.

(D) **கூற்று (A)** தவறு ஆனால் **காரணம் (R)** சரி.

**147.** பின்வருவனவற்றில் **தவறான** கூற்றை தேர்ந்தெடு.

(A) டாராக்சம் அஃபிசினேல் தாவரத்தின் ஒரு பகுதி ஒளிக்கேற்ப தன் துலங்களை வெளிப்படுத்துவது ஒளியுறு வளைதல் எனப்படும்.

(B) தொட்டாச்சிணுங்கி தாவரத்தின் இலைகள் தொடுதல் மூலமாக ஏற்படும் விளைவு நடுக்கமுறு வளைதல் ஆகும்.

(C) ✓ வேரானது எதிர் புவி சார்பசைவாகவும், நேர் ஒளி சார்பசைவாகவும் உள்ளது.

(D) டூலிப் தாவரத்தின் மலர்கள் வெப்ப நிலைக்கேற்ப தன் துலங்கலை வெளிப்படுத்துவது வெப்பமுறு வளைதல் எனப்படும்.

**148.** On an average, an adult human being at rest breathes in and out __________ times in a minute.

(A) 10 - 12
✓(B) 15 - 18
(C) 20 - 25
(D) 20 - 30

**149.** A person with blood group AB was injured in an accident and has blood loss. Which group of blood should be used for transfusion ?

(A) A or B group
(B) O group
(C) AB group
✓(D) A, B, AB, and O group

**150.** Match **List - I** with **List - II** :

| List-I | | List-II | |
|---|---|---|---|
| (a) | Condensation | (i) | Water droplets to clouds |
| (b) | Precipitation | (ii) | Water to water vapour |
| (c) | Flowing back to ocean | (iii) | Water vapour to water |
| (d) | Evaporation | (iv) | Rain water to sea |

(A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
✓(B) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

- o O o -

**148.** ஓய்வு நிலையில் உள்ள ஒரு வளர்ந்த மனிதன் சராசரியாக நிமிடத்திற்கு __________ முறை மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுகின்றான்.

(A) 10 - 12
✓(B) 15 - 18
(C) 20 - 25
(D) 20 - 30

**149.** AB இரத்த வகையை சார்ந்த ஒருவருக்கு விபத்தின் காரணமாக அதிக இரத்த இழப்பு ஏற்படுகிறது. அவருக்கு எந்த இரத்த வகையை செலுத்த வேண்டும் ?

(A) A அல்லது B வகை
(B) O வகை
(C) AB வகை
✓(D) A, B, AB மற்றும் O வகை

**150.** **வரிசை-I** -ல் உள்ளதை **வரிசை-II** உடன் பொருத்துக.

| வரிசை-I | | வரிசை-II | |
|---|---|---|---|
| (a) | ஆவி சுருங்குதல் | (i) | நீர்துளிகள் மேகமாகுதல் |
| (b) | வீழ்படிவாதல் | (ii) | நீரானது நீராவியாதல் |
| (c) | கடலை நோக்கி செல்லுதல் | (iii) | நீராவி நீராக மாறுதல் |
| (d) | ஆவியாதல் | (iv) | நீரோடை கடல் ஆகுதல் |

(A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
✓(B) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
(C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
(D) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

- o O o -

SPACE FOR ROUGH WORK

# குறிப்புகள் / INSTRUCTIONS

(கவனமாக படித்து அதன்படி நடக்கவும் / **READ CAREFULLY AND COMPLY)**

# முக்கிய குறிப்புகள் / IMPORTANT INSTRUCTIONS

**OMR விடைத்தாளில், வினாத்தொகுப்பு வரிசையை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விண்ணப்பதாரரே சரியாக நிரப்ப வேண்டும்.**

**Candidate alone should fill the Question Booklet Series correctly at the prescribed places in the OMR Answer Sheet.**

1. விண்ணப்பதாரர் தனக்கு அளிக்கப்பட்ட வினாத்தொகுப்பானது தனது மொழிக்குரியதா என்பதை சரிபார்த்துக்கொள்ளவும். மொழிப்பாடம் மாற்றி இருந்தால் உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.
   Candidates should verify the language of the question paper given to him/her. If the Language is changed, inform the Hall Superintendent immediately.
2. குறிப்புகளை முழுவதுமாக படித்துவிட்டு OMR **விடைத்தாளில்** வரிசை எண் 1 லிருந்து 5 மற்றும் வினாத் தொகுப்பில் வரிசை எண் 1 லிருந்து 5 வரையிலான தகவல்களை கவனமாக நிரப்பவும். நீங்கள் குறிப்புக்களில் கூறியுள்ளபடி சரியான முறையில் தகவல்களை நிரப்பி, கையொப்பம் இடாவிடில், உங்களது விடைத்தாளை மதிப்பீடு செய்யும் போது ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.
   Read the Instructions completely and carefully and fill in the details from Sl.No. 1 to 5 in the OMR Answer Sheet and Sl.No. 1 to 5 in the Question Booklet. If you fail to fill in the details and sign as instructed correctly, you will be personally responsible for the consequences arising during scanning of your Answer Sheet.
3. தவறாக பூர்த்தி செய்யப்படும்/செய்யப்படாமல் உள்ள OMR விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
   OMR Answer Sheets will not be evaluated if the OMR Answer Sheet is filled wrongly/unfilled.
4. வினாத்தொகுப்பில் OMR விடைத்தாளின் எண்ணை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.
   OMR Answer Sheet No. should be written in the space provided in the Question Booklet.
5. இந்த வினாத்தொகுப்பானது **150** வினாக்களை **48** பக்கங்களில் கொண்டுள்ளது. வினாத் தொகுப்பினை திறக்குமாறு அறிவுறுத்தப்பட்ட பின்னரே, விண்ணப்பதாரர்கள் வினாத்தொகுப்பின் சீலிடப்பட்ட முத்திரைகளை திறக்க வேண்டும். வினாத் தொகுப்பின் பக்கம் **3** லிருந்து **45** வரை **150** வினாக்கள் இடம் பெற்றுள்ளனவா என சரிபார்க்கவும்.
   The Question Booklet comprises of **48** pages having **150** questions. After being instructed to open the Booklet, then only the candidates should open the Question Booklet seals. Check whether the Booklet contains **150** Questions starting from page No. **3** to **45.**
6. அனைத்து வினாக்களும் கொள்குறி வகை வினாக்கள். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே ஒரு சரியான விடை மட்டுமே உள்ளது. **தவறான விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படமாட்டாது.**
   All questions are of MCQ (Multiple Choice Question) type. There is only one correct answer to each question. **There will be no negative marking for wrong answers.**
7. மொழி வினாக்களை கொண்ட பகுதி தவிர அனைத்து வினாக்களும் இருமொழிகளில் தரப்பட்டுள்ளன. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
   All questions other than language questions are bilingual (Tamil and English).
8. வினா(க்கள்) இல் தவறுகள் இருப்பின், தேர்வின் போது இந்த வினா/வினா(க்கள்) சரி செய்யப்படமாட்டாது.
   In event of any mistake in any question/s, no corrections will be made in the Question/s during the examination.
9. வினாத்தொகுப்பின் இறுதியில், தனியாக தரப்பட்டுள்ள இடத்திலேயே ROUGH WORK செய்து பார்க்க வேண்டும். இதை வினாத்தொகுப்பிலிருந்து கிழிக்கக்கூடாது. கூடுதல் தாள்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
   Rough work, if any may be done in the Question Booklet only in the space provided at the end of the Booklet. Do not tear it off from the Question Booklet. No additional paper shall be provided.
10. தேர்வு அறையில் மடக்கை அட்டவணை, கால்குலேட்டர், அளவுகோல், மொபைல் தொலைபேசி, பேஜர், டிஜிட்டல் நாட்குறிப்பேடு மற்றும் எந்தவொரு மின்னணு சாதனங்களையும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை பயன்படுத்தினால் தகுதிநீக்கம் செய்யப்படுவீர்கள்.
    Use of Log tables, Calculators, Slide rules, Mobile Phone, Pager, Digital Diary or any other electronic item/ instrument etc. in the examination hall is not allowed. Their use will result in disqualification.

11. வினாத்தொகுப்பினுடன் OMR விடைத்தாளானது தனியாக வழங்கப்படும்.
OMR Answer Sheet will be provided along with Question Booklet separately.

12. வினாத் தொகுப்பானது விண்ணப்பதாரர்களுக்கு 9.50 மு.ப. க்கு வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் வினாத்தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் நிரப்ப வேண்டிய விவரங்களை சரியாக நிரப்ப வேண்டும். 10.00 மு.ப. மணிக்கு நீண்ட மணி ஒலிக்கும். அதன் பிறகே சீலிடப்பட்ட முத்திரையை திறக்கவேண்டும். வினாத் தொகுப்பினை திறந்தவுடன் ஏதேனும் பக்கம்/வினா இல்லாமல் இருக்கிறதா அல்லது பக்கங்கள் கிழிந்தோ, சரியாக அச்சுபதிவு ஆகாமலோ இருக்கிறதா, ஒரேபக்கம் திரும்பதிரும்ப வருகிறதா என சரிபார்க்கவும். வினாத்தொகுப்பில், எங்கேயாவது ஏதேனும் குறை இருப்பினும், அதை அறை கண்காணிப்பாளரிடம் தெரிவித்து வினாத்தொகுப்பினை மாற்றிக்கொள்ள வேண்டும். தேர்வு முடிவதற்கான எச்சரிக்கை மணி 12.55 பி.ப.க்கும், இறுதி மணி 1.00 பி.ப.க்கும் அடிக்கும்.
The Question Booklet will be issued to the candidates at 9.50 am and the candidates must fill all entries in Question Booklet and OMR Answer Sheet. Candidates should open the question booklet seal after a long bell at 10.00 am. After opening the Question Booklet, ensure that no page/question is missing/not printed/torn/repeated. In case, you find any defect anywhere in the Question Booklet, immediately inform the Room Invigilator and get it replaced by him. Warning Bell will ring at 12.55 pm, and the last long bell will ring at 1.00 pm.

13. தேர்வு எண், OMR விடைத்தாள் எண், வினாத்தொகுப்பு எண், பெயர் மற்றும் கையொப்பம் போன்றவைகளை அதற்கென வினாத்தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்ப வேண்டும்.
Write your Roll No., OMR Answer Sheet No., Question Booklet Series, Name and put your signature in the space provided in the Question Booklet as well as in the OMR Answer Sheet.

14. ஒவ்வொரு வினாவிலும் A, B, C, D என்று குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவையும், கவனமாக படித்து, சரியான விடையினை தேர்ந்தெடுத்து, OMR விடைத்தாளில் அவ்வினாவிற்கென தரப்பட்டுள்ள இடத்தில் சரியான வட்டத்தை நிழலிடுவதன் மூலம் உங்களது விடையை குறிப்பிடவும். நிழலிடுவதற்கென கருமை நிற பந்து முனை பேனாவினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
With each question, you will find four possible answers, marked by the letter A, B, C and D. Read each question carefully, and find out which answer is correct and indicate your answer by darkening the appropriate circle completely in the OMR Answer Sheet corresponding to the question. For marking answer, use Black Ball Point pen only.

15. ஆங்கில வழி வினாவிற்கு இணையாக தமிழ் வழி வினாக்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி வினாக்களில் ஏதேனும் ஐயப்பாடுகள், முரண்பாடுகள் தேர்வருக்கு ஏற்படுமாயின் ஆங்கில வழி வினாவினை அடிப்படையாகக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் மற்றும் ஆங்கில வழி வினாவே இறுதியானதாக கருதப்படும்.
The Tamil version of the question is available corresponding to the English version. In case of any discrepancy or ambiguity, candidates are advised to refer to the English version of the question, which shall be treated as the final one.

16. OMR விடைத்தாளானது கணினி மூலம் மதிப்பீடு செய்யப்படும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய குறிப்புகளை கடைபிடிக்காவிடில், கணினி மூலம் மதிப்பீடு செய்வது இயலாததாகிவிடும். இதனால், விண்ணப்பதாரருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார்.
OMR Answer Sheet is designed for computer evaluation. If you do not follow instructions given above and shown in the OMR Answer Sheet, evaluation by computer will become difficult. Any resultant loss to the candidate on the above account, shall be of the candidate only.

17. இறுதி மணி ஒலிப்பதற்கு முன் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வு அறையை விட்டு வெளியேறக் கூடாது. தேர்வு அறையை விட்டுச் செல்லும் முன்பு OMR விடைத்தாளை அறை கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வினாத்தொகுப்பினை விண்ணப்பதாரரே எடுத்துச் செல்லலாம்.
No candidate should leave the examination hall before the final bell. The OMR Answer Sheet should be handed over to the Room Invigilator before leaving the examination hall. The candidate is allowed to take the Question Booklet with him/her.